Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk


# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, SEPTEMBER 19 2024

வியாழக்கிழமை செப்டெம்பர் 19, 2024 | ஒளி: 10 கதிர் 054 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

## “மீள்கிறது இலங்கை”



இலங்கை அரசாங்கத்திற்கும் சர்வதேச பிணைமுறி உரிமையாளர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் வியாழக்கிழமை (19) நடைபெறவுள்ளதாகவும், அதன் பின்னர் இலங்கையின் வங்குரோத்து நிலை முற்றாக முடிவடைந்து அனைத்து நாடுகளினதும் ஆதரவு மீண்டும் நாட்டுக்குக் கிடைக்கும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



இருளில் தள்ளும் அரசியலுக்கு

# “பலியாகி விடாதீர்கள்”

**சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி எமக்குத் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருந்தது**

அடுத்த 10 வருடங்களில் ஒவ்வொரு பிள்ளையும் ஆங்கில மொழிப் புலமையைப் பெறுவதற்குத் தேவையான வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்காக “ English for all” என்ற வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



20 இலட்சம் மேலதிக வாக்குகளால்

# “வெற்றி நிச்சயம்”

**திருடிச் சென்ற அனைத்து சொத்துக்களையும் வளங்களையும் மீண்டும் பெற்றுக்கொள்வோம்**

**இறுதித் தருணத்தில் உங்கள் வாக்குகளை வீணடிக்காமல் தொலைபேசிக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்**

புலனாய்வுத்துறை அறிக்கையின் பிரகாரம், 20 இலட்சம் மேலதிக வாக்குகளால் ஐக்கிய மக்கள் சக்தி வெற்றி பெறும். காலை வாருகின்ற ரணில்-அனுர ஜோடி கீழ் மட்டத்திலே இருக்கின்றது. புனித தலதா மாளிகையில் தேர்தல் விஞ்ஞாபனத்தை முதன் முதலில் சமர்ப்பித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்ட பின்னரே நாம் தேர்தல் பணிகளை ஆரம்பித்தோம். தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் அனைத்தையும் புத்த பெருமானின் ஆசீர்வாதங்கள் பாதுகாக்கும் என்பதோடு நாம் நிச்சயமாக வெற்றி பெறுவோம். இந்த வெற்றியை அமைதியான முறையில் கொண்டாடுமாறு கேட்டுக் கொள்கின்றேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## இருவருக்கு மட்டுமே தனி வாக்களிப்பு நிலையம்

**வாக்கெடுப்பு நிலையத்தில் பின்பற்றப்படும் சகல நடைமுறைகளும் இங்குப் பின்பற்றப்படவுள்ளது**

எம்.எஸ்.எம்.நூர்தீன்



ஒன்பதாவது ஜனாதிபதியை தேர்ந்தெடுக்கும் ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் 21ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் அனைத்தும் நிறைவு செய்யப்பட்டு வருவதாக மட்டக்களப்பு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் மாவட்ட அரசாங்க அதிபருமாகிய

தொடர்ச்சி P2

## வாக்காளர் அட்டையை சனியன்றும் பெறலாம்



இதுவரை உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள், தேர்தல் நடைபெறும் தினம் (21) வரை தமது பிரதேசத்திலுள்ள தபால் நிலையத்துக்குச் சென்று வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக்கொள்ள முடியுமென பிரதி தபால்மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## “பதிலளிக்காது தலையை பரிசோதிக்க சொல்கிறார்”



அஸ்லம் எஸ்.மௌலானா

அனுரகுமார திசாநாயக்க ஆட்சிக்கு வந்தால், நாடு முழுவதும் ஓரினச்சேர்க்கை நிலையங்களும் விபசார விடுதிகளும் சட்டப்படி திறக்கப்படும் என்று நான் கூறிய கருத்துக்கு அவர் பதிலளிப்பதை விடுத்து, எனது தலையை பரிசோதிக்க வேண்டுமென கூறியுள்ளார் என கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.ம். ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## அரியநேத்திரனுக்கு MSD பாதுகாப்பு

நிதர்ஷன் வினோத்

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமிழ் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரனுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

பொது வேட்பாளரின் பாதுகாப்பு தொடர்பாக அண்மையில் பிரதிப் பொலிஸ் மா அதிபரால் விடுக்கப்பட்ட எச்சரிக்கைக்கமைய குறித்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை பாதுகாப்பு பிரிவின் (MSD) இரண்டு உத்தியோகத்தர்கள் நேற்று முதல் பாதுகாப்பை வழங்கும் பணியை முன்னெடுத்துள்ளனர்.

அமைச்சரவை பாதுகாப்பு பிரிவின் (MSD) ஒன்பது உத்தியோகத்தர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில் அரியநேத்திரன் இரண்டு பேரை மாத்திரம் கோரியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பரீட்சை திணைக்கள அறிவிப்புக்கு எதிராக

## பெற்றோர் ஆர்ப்பாட்டம்

5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையின் முதல் 3 வினாக்களை நீக்கி பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுமாறு பரீட்சை திணைக்களத்தினால் முன்வைக்கப்பட்ட தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துப் பெற்றோர்கள் சிலர் பரீட்சை திணைக்களத்திற்கு முன்பாக புதன்கிழமை(18) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 15ஆம் திகதி நடைபெற்ற 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையின் போது வினாத்தாளின் முதல் மூன்று வினாக்களும் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டிருந்தது.

இதனையடுத்து, 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையின்



முதல் 3 வினாக்களை நீக்கி பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுமாறு பரீட்சை திணைக்களத்தினால் செவ்வாய்க்கிழமை (17) அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்த பெற்றோர்கள் சிலர் பரீட்சை

தொடர்ச்சி P2

## விபத்தில் மாணவி பலி

வி.ரி.சகாதேவராஜா

சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியில் தரம் 9 பயிலும் 14 வயது மாணவி வாகன விபத்தில் பரிதாபகரமாக பலியானார்.

அம்பாறை - கல்முனை வீதியில் மாவடிப்பள்ளி பெரியபள்ளி வாசலுக்கு முன்பாக புதன்கிழமை (18) காலை 08.15 மணியளவில் நடைபெற்ற வாகன விபத்தில் 14 வயது சிறுமி ஸ்தலத்தில் மரணமடைந்துள்ளார்.

தொடர்ச்சி P2



## தீர்த்தத்தில் ஒருவர் மரணம்; மற்றுமொருவர் மாயம்

எம்.றொசாந்த், எஸ்.தில்லைநாதன்

யாழ்ப்பாணம்-வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய சமுத்திரத்தீர்த்த திருவிழாவின் போது, ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்த நிலையில் , மற்றுமொருவர் கடலில் மூழ்கிக் காணாமல் போயுள்ளார்.

வடமராட்சி கிழக்கு குடத்தனை பகுதியைச் சேர்ந்த கந்தசாமி வினோகரன் (வயது 54) என்பவரே உயிரிழந்துள்ளதுடன் நுணாவில் பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய இளைஞன் கடலில் மூழ்கிக் காணாமல் போயுள்ளார்.

தொடர்ச்சி P2

## மீன் கடித்ததால் மீனவருக்கு ஆபத்து

தெற்கே ஆழ்கடலில் மீன் கடித்து கவலைக்கிடமான நிலையில், இருந்த மீனவர் ஒருவரை வெளிநாட்டு கப்பல் ஒன்று புதன்கிழமை(18) மீட்டு,



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “பலியாகி விடாதீர்கள்”

கல்வி அமைச்சராகத் தான், வெள்ளை அறிக்கை மூலம் இந்த பிரேரணையைக் கொண்டுவந்தபோது, அதற்கு எதிராக ஜே.வி.பி. வீதியில் இறங்கியதை நினைவு கூர்ந்த ஜனாதிபதி, அந்த வேலைத்திட்டம் அன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் இன்று நாட்டில் ஆங்கில மொழி தொடர்பான பிரச்சினை ஏற்பட்டிருக்காது எனவும் சுட்டிக்காட்டினார்.

ஆங்கில மொழி அறிவு இன்மையால் இளைஞர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு அரசாங்கத்தின் தீர்வு என்ன? என இளைஞர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இவ்வாறு தெரிவித்தார். மல்வானை மக்களுடனான சந்திப்பு செவ்வாய்க்கிழமை (17) நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

Gen Z தலைமுறையினருக்குச் சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதே தமது நோக்கம் என தெரிவித்த ஜனாதிபதி, வேலைத்திட்டங்களற்ற பொய்யான வாக்குறுதிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட சஜித் மற்றும் அனுரவின் அரசியல் நலன்களுக்கு இளைஞர்கள் பலியாக வேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டார்.

நான் பிரதிநிதித்துவப்படுத்திய பியகம தொகுதிக்கு வருகை தரும் சந்தர்ப்பங்களில் மல்வானை மக்களைச் சந்திப்பதை நான் வழமையாகக் கொண்டிருந்தேன். மல்வானை மக்கள் எப்போதும் எனக்கு பாரியளவு ஆதரவை வழங்கியுள்ளனர்.

அன்று மல்வானை மிகச் சிறியதொரு நகரம். வர்த்தக வலயம் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மல்வானை ஒரு பாரிய நகரமாக மாறியது. இன்று பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மல்வானை வர்த்தகம் மற்றும் வர்த்தக வலயத்துடன் இணைந்து இந்தப் பகுதியில் அபிவிருத்தியடைந்த பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

2022இல் பாரிய நெருக்கடியைச் சந்தித்தோம். பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தபோது, மல்வானை வர்த்தக மக்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். பொருட்களை இறக்குமதி செய்ய அந்நியச் செலாவணி இருக்கவில்லை. தற்போது அந்த நிலையிலிருந்து விடுபட்டுள்ளோம். தற்போது நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி அடைந்து வருகிறது.

நான் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி எமக்குத் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருந்தது.

பணத்தை அச்சிடவோ அல்லது கடன் பெறவோ முடியாத நிலை ஏற்பட்டது. அதனால் பல கடினமான முடிவுகளை எடுக்க வேண்டியிருந்தது. ஆனால், சுமார் ஆறு மாதங்களுக்குப் பிறகு, ரூபா வலுவடைந்து, பொருட்களின் விலைகள் குறைந்து, நாடு நிலைபெறத் தொடங்கியது. இவை அனைத்தையும் மேற்கொள்ளும் அதே நேரம், குறைந்த வருமானம் பெறுவோருக்கு சமுர்த்தியை விட மும்மடங்கு அதிகமாகப் பயன்களை அளிக்கும் ‘அஸ்வெசும’ திட்டத்தைச் செயல்படுத்தவும், அரசத்துறை ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்துவதற்காக தற்போது உதய ஆர்.செனவிரத்ன குழுவின் அறிக்கையை அமுல்படுத்தவும் எம்மால் முடிந்தது என்றார்.

# “வெற்றி நிச்சயம்”

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் கூட்டணி ஏற்பாடு செய்த 68 ஆவது மக்கள் வெற்றி பேரணி செப்டம்பர் 18 ஆம் திகதி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் மொனராகலையில் மிக வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், வன்முறை என்பது ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கையல்ல. எனவே மாற்றுக் கொள்கையோடு இருக்கின்ற எவருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படாத வகையில் இந்த நாட்டை கட்டி எழுப்புகின்ற பயணத்தில் அனைவரையும் பங்காளர்களாக இணைத்துக் கொள்வோம். தான் மத சுதந்திரத்தைக் கௌரவப்படுத்துவதோடு, பௌத்தம் இந்து இஸ்லாம் கத்தோலிக்கம் ஆகிய மதங்களைப் பின்பற்றுவதற்கு எவருக்கும் உரிமை இருப்பதனால், அந்த உரிமையைப் பாதுகாப்பதோடு, மதசார்பற்ற நாட்டை உருவாக்குவதில்லை .

தாம் அதிகாரத்திற்கு வந்து ஆறு மாதங்களுக்குள் போதைப்பொருள் விநியோகத்தை நிறுத்துவதற்குத் தேவையான அதிகபட்ச தீர்மானங்களை எடுத்து, போதைப் பொருள் மாபியாவை நிறைவுக்குக் கொண்டு வருவோம்.

மக்கள் விடுதலை முன்னணி, திசைகாட்டி, பொது ஜன முன்னணி, யு என் பி ஆகியவற்றுடன் தொடர்புடைய அனைவரும் இறுதித் தருணத்தில் உங்கள் வாக்குகளை வீணடிக்காமல் தொலைபேசிக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இந்த முறை தேர்தலில் 20 இலட்சம் மேலதிக வாக்குகளால் நாம் வெற்றி பெறுவோம்.

எம்மிடம் பொய், திருட்டு, மோசடி என்பன இல்லை. அரசியல் டீல்கள் இல்லை. பாதிக்கப்பட்டிருக்கின்ற 220 இலட்சம் மக்களை மீட்டெடுப்பதற்கான சமூக ஒப்பந்தம் மாத்திரமே காணப்படுகின்றது.

இதன் போதும் வரி சுமையைக் குறைத்து முதலீடுகளை அதிகரித்து ஊழல் மோசடிகளை இல்லாதொழிப்போம். நாட்டை சீரழித்த திருடர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தி நாட்டிலிருந்து திருடிச் சென்ற அனைத்து சொத்துக்களையும் வளங்களையும் மீண்டும் நாட்டுக்குப் பெற்றுக் கொள்வோம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

# தீர்த்தத்தில் ஒருவர் மரணம் மற்றுமொருவர் மாயம்

சமுத்திர தீர்த்த திருவிழா செவ்வாய்க்கிழமை (17) மாலை இடம்பெற்றதுடன், இதன்போது பெருமளவானோர் கடலில் நீராடியுள்ளனர்.

அவ்வேளை, ஒருவர் கடலில் மூழ்கிய நிலையில் அவரை அருகில் நின்றவர்கள் காப்பாற்றி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதிலும் , அவர் ஏற்கெனவே உயிரிழந்து விட்டார் என வைத்தியர்கள் அறிக்கையிட்டுள்ளனர். அதேவேளை நீராடிக்கொண்டிருந்த இளைஞர் ஒருவரும் கடலில் மூழ்கிக் காணாமல் போயுள்ளார். காணாமல் போனவரைச் செவ்வாய்க்கிழமை (17) இரவு வரையில் கடலில் தேடிய நிலையிலும் அவர் மீட்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஓமந்தை விபத்தில் இருவர் பலி

க.அகரன்

வவுனியா-ஓமந்தை பகுதியில் புதன்கிழமை(18) மாலை இடம்பெற்ற விபத்தில் இருவர் மரணமடைந்துள்ளனர்.

ஓமந்தை பன்றிக்கெய்தகுளம் பகுதியில் இருந்து வவுனியா நோக்கி மோட்டார்சைக்கிளில் வந்துகொண்டிருந்த இருவர் ஓமந்தை எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அண்மையில் சென்றுகொண்டிருந்த போது வீதியில் நின்ற ஒருவருடன் மோதியதில் விபத்து இடம்பெற்றது.

விபத்தில் பலத்த காயமடைந்த இருவரும் வீதியால் சென்றவர்களால் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். எனினும், அவர்கள் ஏற்கனவே மரணமடைந்துள்ளதாக வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தில் ஓமந்தை பன்றிகெய்தகுளம் பகுதியைச் சேர்ந்த சங்கீதன் (வயது 40) முல்லைத்தீவு பகுதியைச் சேர்ந்த யோகராசா (வயது 42) ஆகியோரே



மரணமடைந்துள்ளனர். சம்பவம் தொடர்பாக ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# இருவருக்கு மட்டுமே தனி வாக்களிப்பு நிலையம்

ஜஸ்டினா முரளிதரன் தெரிவித்துள்ளார். அதே வேளை, மாவட்டத்தில் இத்தேர்தலில் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றுள்ள 449,606 பேர் வாக்களிப்பதற்காக 442 வாக்களிப்பு நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கடந்த தேர்தல்களின் போது, மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்கு பிரதேச செயலக நிர்வாக எல்லைக்குட்பட்ட மாந்தீவு தொழுநோய் வைத்தியசாலையில் தொடர்ச்சியாகச் சிகிச்சை பெற்று வந்த 2 நோயாளர்களுக்காக மாந்தீவிலேயே விசேட வாக்களிப்பு நிலையம் நிறுவப்பட்டு வாக்களிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் தற்சமயம் குறித்த இரண்டு நோயாளர்களும் மாந்தீவு வைத்தியசாலையில் இல்லை.

இவர்கள் இருவருக்கும் மட்டக்களப்பு புதூர் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் மண்டப இல-3இல் வாக்களிப்பதற்கான விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இவர்கள் இருவருக்குமாக விசேடமாக மேற்கொள்ளப்படவுள்ள இவ் வாக்களிப்பு நிலையத்திற்கு இவர்கள் வருகை தரும் பட்சத்தில் தமது வாக்குகளைப் பதிவு செய்யலாம் எனவும் பொதுவான வாக்கெடுப்பு நிலையத்தில் பின்பற்றப்படும் சகல நடைமுறைகளும் இங்குப் பின்பற்றப்படவுள்ளது என்றார்.

# “மீள்கிறது இலங்கை”

மாத்தறையில் புதன்கிழமை (18) இடம்பெற்ற ‘ரணிலால் இயலும்’ வெற்றிப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி, தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பு வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளது என்ற செய்தியைச் செப்டெம்பர் 21 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைவதாகவும் குறிப்பிட்டார்.

# வாக்காளர் அட்டையை சனியன்றும் பெறலாம்

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளில் சுமார் 97 சதவீதம் விநியோகிக்கப்பட்டுள்ளதாகத் தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 3ஆம் திகதி ஆரம்பமான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை விநியோகம் 14ஆம் திகதி நிறைவடைந்தது எனத் தெரிவித்துள்ள பிரதி தபால்மா அதிபர் ராஜித ரணசிங்க, வாக்காளர் அட்டைகளை சனிக்கிழமை (21) பிற்பகல் வரையிலும் தபாலங்களில் பெற்றுக்கொள்ள முடியும் என்றார்.

# மீன் கடித்ததால் மீனவருக்கு ஆபத்து

கொழும்பு துறைமுகத்திற்குக் கொண்டு சென்று, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாகக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டவர் வென்னப்புவ தீவில் வசிக்கும் மீனவர் என கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

வென்னப்புவ மீன்பிடி துறைமுகத்தில் இருந்து மீன்பிடி நடவடிக்கைகளுக்காக ஏழு மீனவர்களை ஏற்றிக்கொண்டு பலநாள் மீன்பிடிக் கப்பல் செவ்வாய்க்கிழமை (17) ஆழ்கடலுக்குச் சென்றுள்ளது. இந்நிலையிலேயே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

# காலநிலை அறிக்கையை கோரியது தேர்தல்கள் ஆணைக்குழு

எதிர்வரும் நாட்களில் நாட்டின் காலநிலை நிலைவரம் தொடர்பில் முழுமையான அறிக்கை வளிமண்டலவியல் திணைக்களத்திடம் இருந்து தேர்தல்கள் ஆணைக்குழு பெற்றுக்கொண்டுள்ளது.

மேலும், மோசமான வானிலை நிலவும் பட்சத்தில் வாக்குப்பதிவுக்கு இடையூறு ஏற்படாமல் தடுக்கும் வகையிலும், அதற்கு முன்கூட்டியே தயாராகும் வகையிலும் வளிமண்டலவியல் திணைக்களத்திடம் அறிக்கை பெறப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதுதவிர, வெள்ளிக்கிழமை (20) பிற்பகல் 3:30 மணிக்கு பின்னர் மூன்று மணிநேரத்துக்கு ஒரு தடவை வானிலை அறிக்கையைத் தேர்தல்கள் ஆணைக்குழு கோரியுள்ளதாகவும் அறியமுடிகின்றது.

இதற்கிடையில், மோசமான வானிலை மற்றும் பேரிடர்களால் வாக்குப்பதிவு தடைப்படுவதைத் தடுக்க தேவையான ஏற்பாடுகளைத் தயார் செய்யுமாறு அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கும் தேர்தல் ஆணையம் சமீபத்தில் அறிவுறுத்தியுள்ளது.

மேலும் திடீர் வெள்ளத்தைச் சமாளிக்கப் படகுகள் தயார் செய்யுமாறு கடற்படைக்குத் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

# விபத்தில் மாணவி பலி

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனையில் விசேட கல்விக்குப் பொறுப்பான ஆசிரிய ஆலோசகர் அகமட்லெவ்வையின் புதல்வியே இவ்வாறு பலியாகியுள்ளார்.

தந்தையுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த மாணவியின் மீது தனியார் போக்குவரத்து பஸ் ஒன்று மோதியதிலேயே இந்த விபத்து இடம் பெற்றுள்ளதாகத் தெரிகிறது.

சம்மாந்துறையை சேர்ந்த மாணவி இவ்வாறு விபத்தில் மரணமடைந்த செய்தி காட்டுத் தீ போல் பரவியது. சம்மாந்துறை சோகமயமாக உள்ளது.

இந்த விபத்து நடந்தவுடன் குறித்த பஸ்ஸின் சாரதி விபத்து நடந்த இடத்திலிருந்து தப்பி ஓடியுள்ளார். எனினும், பஸ்ஸின் சாரதி காரைதீவு பொலிஸில் சரணடைந்துள்ளார் என்றும் தெரிவித்துள்ள காரைதீவு பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பெற்றோர் ஆர்ப்பாட்டம்

திணைக்களத்திற்கு முன்பாக புதன்கிழமை (18) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதுடன் பரீட்சையை இரத்துச் செய்யுமாறும் கூறியுள்ளனர்.

இதன்போது, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள பெற்றோர்கள் சிலருக்குப் பரீட்சை திணைக்களத்திற்குள் சென்று கடிதங்களைச் சமர்ப்பிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. இந்த விடயம் குறித்து பரீட்சைகள் ஆணையாளர் மிகவும் கவனக்குறைவாக இருப்பதாகவும் இதனால் அவர் தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

# “பதிலளிக்காது தலையை பரிசோதிக்க சொல்கிறார்”

அம்பாறை மாவட்டம் காரைதீவு, மாளிகைக்காடு பிரதேசத்தில் சஜித் பிரேமதாசவை ஆதரித்து செவ்வாய்க்கிழமை (17) இரவு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒழுங்கு செய்திருந்த பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

முஸ்லிம் காங்கிரஸின் மாளிகைக்காடு கிழக்கு வட்டார அமைப்பாளர் எம். எச். நாஸர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முன்னாள் ஆளுநர் எம். எல்.ஏ.ம்.ஹிஸ்புல்லா மேலும் தெரிவிக்கையில்,

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க ஆட்சிக்கு வந்தால், நாடு முழுவதும் ஓரினச்சேர்க்கை நிலையங்களும் விபசார விடுதிகளும் சாராய தவறணைகளும் சட்டப்படி திறக்கப்படும். அவற்றை எதிர்த்து பள்ளிவாசல்களில் கூட உலமாக்கள் பேச முடியாது.

அனுரகுமார திசாநாயக்கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தை வாசித்து விட்டே நான் மீண்டும் மீண்டும் இதனைக் கூறி வருகின்றேன். அவ்வாறுதான் முஸ்லிம்கள் தமது பெருநாட்களைக் கூட அந்தந்த

**“ முஸ்லிம்கள் தமது பெருநாட்களைக் கூட அந்தந்த தினங்களில் தனித்துவமாகக் கொண்டாட முடியாது. அனைத்து மதத்தினருக்குமான பெருநாட்களை ஒரே நாளில் ஒரே இடத்தில் ஒன்றுகூடிக் குடித்து கும்மாளமடித்தே கொண்டாட முடியும்**

தினங்களில் தனித்துவமாகக் கொண்டாட முடியாது. அனைத்து மதத்தினருக்குமான பெருநாட்களை ஒரே நாளில் ஒரே இடத்தில் ஒன்றுகூடிக் குடித்து கும்மாளமடித்தே கொண்டாட முடியும்.

இவையெல்லாம் அநுர குமார திசாநாயக்கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தான் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றை எல்லா இடங்களிலும் கூறி வருகின்றேன்.

ஆனால், எனது இக்குற்றச்சாட்டுகளுக்கு அனுர இன்னும் பதிலளிக்கவில்லை. மாறாக அவரது சாய்ந்தமருது பிரசாரக் கூட்டத்தில் எனது தலையைப் பரிசோதிக்க வேண்டும் என்று கூறிச் சென்றுள்ளார். இவ்வாறு மழுப்பலாக சில கதைகளைச் சொல்கிறாரே தவிர எமது குற்றச்சாட்டுகளை மறுத்துச் சரியாக இன்னும் பதிலளிக்கவில்லை என்றார்.

# வாக்களிப்பு தினத்தன்று விசேட ரயில் சேவை

தேர்தல் கடமைகளில் ஈடுபடும் அரச அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்காக கொழும்பு கோட்டைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் விசேட புகையிரத போக்குவரத்து சேவைகள் வழங்குவதற்கு புகையிரத திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதேவேளை, தேர்தல் நடைபெறும் 21ஆம் திகதி சனிக்கிழமை தொடர்பான ரயில் நேர அட்டவணை வழமை போன்று அமுல்படுத்தப்படும் என ரயில்வே பிரதிப் பொது முகாமையாளர் நந்தன இண்டிபோலகே தெரிவித்தார்.

ஞாயிற்றுக்கிழமை 22ஆம் தேதி நீண்ட தூரச் சேவை ரயில்கள் வழங்கப்படும் என்றும், குறுகிய தூர ரயில்கள் சேவைகள் சில குறைப்புக்கள் ஏற்படக்கூடும் என்றும் அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# “நிற்கும் பக்கத்தை ஜெயிக்க வைப்பதே வீரம்”

எஸ்.கணேசன்

“ஜெயிக்கின்ற பக்கத்தில் நிற்பது வீரம் கிடையாது, நிற்கும் பக்கத்தை ஜெயிக்க வைப்பதே உண்மையான வீரம். செப்டெம்பர் 21ஆம் திகதி அதனை நாம் செய்து காட்டுவோம். சவாலை ஏற்காது தப்பியோடிய தலைவர்கள் பக்கம் அல்ல, சவாலை ஏற்று மக்களைப் பாதுகாத்த தலைவர் பக்கமே நாம் நிற்கின்றோம்.” என்று இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

மலையகத்தை இனி காங்கிரஸ்தான் ஆளும், வேறு எவரும் இங்கு இருக்க முடியாது எனவும் அவர் கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும், சுயேச்சை வேட்பாளரான ரணில் விக்ரமசிங்கவை ஆதரித்து, பூண்டுலோயா நகர மைதானத்தில் செவ்வாய்க்கிழமை(17) மாலை மாபெரும் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“எனக்கும், ரமேஷ் அண்ணனுக்கும் இடையில் 15 வருடகாலம் உறவு உள்ளது. உங்களுக்கு எல்லாம் கொத்மலை ரமேஸை தெரியுமா? ரமேஷ் அண்ணன்



கொத்மலை ரமேஸாக இருக்கும்போதுதான் எனக்குப் பழக்கம் ஏற்பட்டது. மக்கள் சேவைமூலம் அவர் மக்கள் மனங்களை வென்றுள்ளார். எனது தந்தை இன்று இருந்திருந்தால் இதனைக் கண்டு மகிழ்ச்சியடைந்திருப்பார். இந்த பூண்டுலோயா மண்ணில்தான் எமது முதலாவது அரசியல் மேடைப் பேச்சு இடம்பெற்றது.

எனது தந்தை இறந்திருந்தாலும், மக்கள் உறவுகளை எனக்குத் தந்துவிட்டே சென்றுள்ளார். அந்த மக்கள் பலம் எனக்கு போதும்.

இன்று சம்பளம் பற்றி பலர் கதைக்கின்றனர், அடிப்படை நாள் சம்பளம் ஆயிரத்து 350 ரூபாய் என்ற அடிப்படையில் தற்போது சம்பளம் கணிக்கப்படுகின்றது. அடுத்த பத்தாம் திகதியாகும்போது, அதிகரிக்கப்பட்ட சம்பளம்தான் எமது தொழிலாளர்களுக்குக் கிடைக்கப்பெறும்.

ஆயிரத்து 700 ரூபாய் என்றீர்களே, ஆயிரத்து 350 ரூபாய்தானே கிடைக்கின்றது என சிலர் கூறுகின்றனர். நாம் பெருந்தோட்ட நிறுவனங்களின் நிபந்தனைகளுக்கு அடிபணிய முடியாது. எனவே, தொழிலாளர்களுக்குச் சுமை ஏற்படாத வகையில் எஞ்சிய 350 ரூபாவையும் நிச்சயம் நாம் பெற்றுக்கொடுப்போம்.

தோட்டங்களைக் கிராமங்களாக்கும் திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படும். அது தொடர்பில் அரசியல் நோக்கில் எதிரணிகளால் முன்னெடுக்கப்படும் பிரசாரங்களை மக்கள் நம்பக்கூடாது. இது விடயத்தில் மக்கள் சுயமாகச் சிந்தித்துப் பார்த்தால் உண்மை தெரியவரும். காணி உரிமைதான் பிரதான பிரச்சினை. அதனை வென்றெடுத்துவிட்டால் அனைவரும் வீடுகளை அமைக்கக்கூடிய சூழ்நிலை உருவாகும். எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் ஒரே வருடத்தில் வீட்டுப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. ஆனால், காணி உரிமை கிடைத்து விட்டால் நிச்சயம் மாற்றம் வரும்.

சலுகைகள் மூலம் அல்ல கல்வி உரிமையை வழங்குவதன் மூலம் மலையகத்தில் நாம் நிச்சயம் மாற்றத்தை ஏற்படுத்துவோம். சிலர் மலையகத்தின் பெருமையைப் பற்றிப் பேசாமல், வறுமையைப் பற்றி மட்டுமே பேசுகின்றனர். எமக்கும் அடையாளம் உள்ளது. அந்த அடையத்தை நாம் நிச்சயம் பாதுகாப்போம். நாம் நன்றி உணர்வு உள்ள சமூகம் என்ற அடிப்படையில் செப்டம்பர் 21ஆம் திகதி ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குவோம் என்றார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நிதி செயலாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரனினால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கூட்டத்தில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் அமைச்சர் ஜீவன் தொண்டமான், உட்பட தேசிய அமைப்பாளரும், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஏ.பி.சக்திவேல், பாராளுமன்ற உறுப்பினர் நிமல் பியதிஸ்ஸ, முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் பலரும் பிரசாரக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

## பொலிஸாரால் தேர்தல் சுவரொட்டிகள் அகற்றல்

க.அகரன்

எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான இறுதி பிரசாரத்திற்கான நாள் புதன்கிழமை (18) ஆகும். ஆகையால், தேர்தல் மற்றும் வேட்பாளர்கள் தொடர்பான பாதைகள் சுவரொட்டிகளைக் காட்சிப்படுத்துவது தேர்தல் சட்ட விதிமுறை மீறல் என இலங்கையின் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இந்நிலையில், வவுனியாவில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஒன்பதாயிரத்திற்கும் மேற்பட்ட பதாதைகள் மற்றும் சுவரொட்டிகள் நீக்கும் பணிகளை வவுனியா பொலிஸாரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



வவுனியா தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெயக்கொடி தலைமையிலான 20க்கும் மேற்பட்ட பொலிஸார் குறித்த பணியில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தங்கச் சிலையை திருட முயன்ற இருவருக்கு வலை

ரஸீன் ரஸ்மின்

புத்தளம் - கருவலகஸ்வெவ, புளியங்குளம், வெஹெரகல ரஜமஹா விகாரையின் தங்கச் சிலையைத் திருடுவதற்காக வருகை தந்த கொள்ளையர்களின் இருவர் கிராம மக்கள் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாக சாலியாவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

வேன் ஒன்றில் செவ்வாய்க்கிழமை (17) அன்று அதிகாலை குறித்த விகாரைக்கு வருகை தந்த கொள்ளையர்கள் அங்குப் பாதுகாப்புக்கு இருந்த சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை தாக்கி துப்பாக்கிகளையும் பறித்தெடுத்து, அங்கிருந்த தங்கச் சிலையைத் திருட முயற்சித்துள்ளதாகவும் அப்போது பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சத்தமாகக் கூச்சலிட்டதையடுத்து விகாரையில் தங்கியிருந்த தேரர்களும் ஏனையவர்களுடன் கிராம மக்களும் வந்து வளவு வழியாகத் தப்பிச் செல்ல முயற்சித்தவர்களின் ஒருவரை மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

சாலியவெவ பொலிஸாருடன்



இணைந்து, கிராம மக்கள் தப்பிச் சென்ற கொள்ளையர்களைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையைப் புதன்கிழமை (18) காலை முதல் முன்னெடுத்துள்ளதுடன், இதன்போது தப்பிச் சென்ற கொள்ளையர்களில் ஒருவர் தனது வீட்டில் இருந்து மோட்டார் சைக்கிளில் வேறு இடத்திற்குத் தப்பிச் செல்ல தயாராக இருந்த போது, அவரை வளைத்துப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் சாலியாவெவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பெண் மருத்துவரின் விபரங்களை நீக்கியது விக்கிப்பீடியா

உச்ச நீதிமன்ற உத்தரவை அடுத்து கொல்கத்தா ஆர்.ஜி.கர் மருத்துவமனையில் பாலியல் வன்கொடுமை செய்து, கொலை செய்யப்பட்ட வழக்கில் பாதிக்கப்பட்ட பயிற்சி பெண் மருத்துவரின் பெயர், புகைப்படத்தை விக்கிப்பீடியா நீக்கியுள்ளது. இது தொடர்பாகச் செவ்வாய்க்கிழமை (17) உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

இதையடுத்து, விக்கிப்பீடியாவின் தாய் நிறுவனமான விக்கிமீடியா அறக்கட்டளை தரப்பில் விளக்கம் தரப்பட்டுள்ளது. பொதுவாக விக்கிப்பீடியாவில் பதிவாகும் கட்டுரைகளை விக்கிமீடியா அறக்கட்டளை திருத்தவோ அல்லது சென்சார் செய்வதோ இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இது கொள்கை ரீதியிலான முடிவு. இருப்பினும், இந்த விவகாரம் தொடர்பாக அறக்கட்டளை சார்பில் பிரதிநிதி ஒருவர் பயனர்கள் கலந்து கொண்ட விவாதத்தில் பங்கேற்றார் என்றும். அதில் கொல்கத்தா சம்பவம் தொடர்பாகப் பாதிக்கப்பட்ட பயிற்சி மருத்துவரின் பெயரைக் கட்டுரையில் குறிப்பிட வேண்டுமா என்ற கேள்வியை எழுப்பினார். இதையடுத்து தன்னார்வ எடிட்டர் ஒருவர் கொல்கத்தா ஆர்.ஜி.கர் மருத்துவமனையில் பாலியல் வன்கொடுமை வழக்கு தொடர்பான கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்த பாதிக்கப்பட்ட மருத்துவரின் பெயர் மற்றும் புகைப்படம் நீக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது.

விக்கிப்பீடியா தளத்தில் உள்ள இந்தக் கட்டுரை இந்திய நேரப்படி புதன்கிழமை(18) அதிகாலை 3.22க்கு கடைசியாக திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.



## இந்திய துணைத் தூதரக அதிகாருகளுடன் சந்திப்பு

ஏ.எச்.ஹஸ்பர்

யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கைக்கான இந்தியத் துணை தூதர் அதிகாரிகள் மட்டும் திருகோணமலையில் உள்ள ஊடகவியலாளர்களுக்கு இடையிலான சந்திப்பு திருகோணமலையில் உள்ள தனியார் சுற்றுலா ஹோட்டல் ஒன்றில் செவ்வாய்க்கிழமை (17) மாலை இடம்பெற்றது.

இதில் யாழ். துணை தூதுவர் ஸ்ரீ சாய் முரளீஸ் மற்றும் தூதரக அதிகாரி நாகராஜன் ராம சுவாமி ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

குறித்த சந்திப்பில் தற்போதைய தேர்தல் கள நிலவரம் தொடர்பிலும் இலங்கை இந்தியா உறவு தொடர்பிலும் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் வடகிழக்கு மக்களின் தாக்கம் எவ்வாறு செல்வாக்கு செலுத்தப்போகின்றது, சிறுபான்மை இன கட்சிகள் மூலமாக களமிறக்கப்பட்டுள்ள தமிழ் பொது வேட்பாளர் எவ்வாறான தாக்கலைச் செலுத்தப் போகிறார் என்பது பற்றியும் இது சிறுபான்மை சமூகத்துக்குச் சாதகமானதா ? பாதகமானதா ? போன்ற விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

இலங்கை இந்தியத் தொடர்பில் அரசியல் ரீதியான உறவு சுற்றுலாத் துறை அபிவிருத்தி , ஊடகவியலாளர்களுக்கான எதிர்கால பயிற்சிகள் வழங்குவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதுடன், தமிழ் மக்களுடைய சமூக பொருளாதார பிரச்சினைகள் இலங்கை தமிழ் அரசு கட்சியின் அரசியல் நடவடிக்கைகள் தொடர்பிலும் கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு இந்தியாவின் பங்களிப்பு தொடர்பிலும் மேலும் விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றது.

## “நீங்கள் தான் மிகவும் பொருத்தமான தலைவர்”

எதிர்காலத்தில் நாட்டை கட்டியெழுப்பக்கூடிய தலைவர் நீங்கள் தான். அந்த நம்பிக்கை எங்களுக்கு உள்ளது. நாடு வீழ்ந்தபோது, இந்த நாட்டைக் காப்பாற்றுவதற்கு யார் தகுதியானவர் என்று மொட்டுக் கட்சியாகிய நாம் சிந்தித்தோம். அதன்படி, இந்த நாட்டைக் காப்பாற்றுவதற்கு மிகவும் பொருத்தமான தலைவர் நீங்கள் தான் என்று தீர்மானித்தோம் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

சுயேச்சை ஜனாதிபதி வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வெற்றிக்காக மினுவாங்கொடை அலிஸ் பார்க் மைதானத்தில் செவ்வாய்க்கிழமை (17) நடைபெற்ற ‘இயலும் ஸ்ரீலங்கா’ ஜனாதிபதி பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதனால் தான் கடவத்தை கூட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட உங்களை அழைத்தோம். நீங்கள் அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டீர்கள். உங்கள் கட்சியைக் கைவிட்டு, நாங்கள் அனைவரும் அனைவரும் ஒன்றிணையக்கூடிய ஓர் அரசியல் மேடையை உருவாக்கக் கடுமையாக உழைத்ததற்கு நன்றி.

நான் எப்போதும் என் தந்தையின் கொள்கைகளை வைத்துத்தான் அரசியல் செய்கின்றேன். நான் எப்போதும் கட்சியை விட நாட்டைப் பற்றியே சிந்தித்தேன். அதனால்தான் உங்களை வெற்றி பெறச் செய்ய நாங்கள் முன்னோடியாக இருந்தோம் என்றார்.




## எம்.பிக்கு அச்சுறுத்தல்



கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா பண்டாரவை அச்சுறுத்திய தொலைபேசி அழைப்பு தொடர்பில் கண்டி தலைமையக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது .

புதன்கிழமை (18) நள்ளிரவு 12.30 மணி முதல் இரண்டு தொலைபேசி இலக்கங்களிலிருந்து பெண் ஒருவரினால் தமக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட அழைப்புகள் மேற்கொள்ளப் பட்டதாக அவர் முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கண்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





## வாசல் வைக்கும் நிகழ்வு

பதுளை–கந்தேகெட்டிய சார்ணியா தோட்ட ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஆலயத்திற்கு புதிய மூலஸ்தானத்திற்கான கதவு நிலை வாசல் வைக்கும் நிகழ்வு இடம் பெற்றதுடன் கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் இதில் கலந்து சிறப்பித்தார்.

## “வீழ்ச்சியடைந்த நிர்மாணத்துறை இன்னும் மீளவில்லை”

ஜே.ஏ.ஜோர்ஜ்

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் மிகவும் பாதிக்கப்பட்ட நிர்மாணத்துறை இன்னும் மீளவில்லை என இலங்கை தேசிய நிர்மாண சங்கத்தின் தலைவர் டேரின்டன் போல் தெரிவித்தார்.

சுமார் 2000 முதல் 2500 வரையிலான சிறியளவிலான நிர்மாணத்துறையினர் தற்போது தமது தொழிலில் இருந்து விலகியுள்ள நிலையில், நாட்டின் 9 மாகாணங்களில் உள்ள 11 அலுவலகங்களின் ஊடாக, நிர்மாணத்துறையில் உள்ளவர்களுக்கு தெளிவினை பெற்றுக்கொடுத்து அவர்களை வலுப்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

நாட்டில் சிறிய மற்றும் நடுத்தர நிர்மாணத்துறையினரே அதிகளவில் உள்ள நிலையில், நாட்டின் நிர்மாணதுறை சார்ந்த சட்டதிட்டங்கள் தொடர்பில் அவர்களுக்கு போதிய தெளிவின்மையால் பல்வேறு விதிமீறல்கள் இடம்பெறுவதுடன், இது தொடர்பில் தெளிவுபடுத்தல்களை வழங்குவதற்காக நாடு முழுவதும், பல்வேறு செயமர்வுகளை இலங்கை தேசிய நிர்மாண சங்கம் முன்னெடுத்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

# அமைதியான நேரத்தில் சத்தம் போடுவது சட்டவிரோதமானது

ஜனாதிபதித் தேர்தலுக்கான அனைத்து தேர்தல் பிரசாரங்களும், புதன்கிழமை (18) நள்ளிரவு 12 மணிக்கு நிறைவடைந்தன. ஒரு நிமிடத்திற்குப் பிறகு எந்தவொரு பிரசார நடவடிக்கையிலும் ஈடுபட முடியாது. வீடுகளுக்குப் பக்கத்தில் உள்ள வீடுகளுக்குச் சென்று பிரசாரத்தில் ஈடுபடுதல், அல்லது மிகவும் தந்திரமான முறையில் அடையாளங்களைக் காண்பிப்பது உள்ளிட்ட எந்த வகையான பிரசாரமும் சட்டவிரோதமானது.

கடந்த காலங்களில் இப்படித் தேர்தல் விதிகளை மீறி, சட்ட வழியில் தீர்வு காணும் விடயமாக இருந்தாலும், தற்போது அதற்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் போராட்டம் நடத்தினாலும், அந்த வகையில் செயல்படுபவர்கள் இருக்கத்தான் செய்கின்றனர்.

மற்ற எல்லா காலங்களிலும் பாரம்பரிய ஊடகங்கள் தேர்தல்களில் முக்கியமாக இருந்தன. கடைசி பிரசார நாளுக்குப் பிறகு, பெரிய அளவில் விளையாடுவது யாருக்கும் கடினமாக இருந்தது. பாரம்பரிய ஊடகங்களைக் கண்காணிப்பது எளிது. மேலும், பொறுப்புக்குக் கட்டுப்பட்டவர்கள் என்பதால், எவ்வளவுதான் செலவைக் கேட்டாலும், சட்ட விரோத செயல்களுக்கு வளைந்து கொடுக்க மாட்டார்கள்.

இப்போதெல்லாம், சமூக ஊடகங்கள் அமைதியான நேரத்தில் சத்தம் போடுவதற்கு மிகவும் பிரபலமான வழியாகும். தகவல் விநியோகத்தின் வேகம் மற்றும் அணுகல் எளிமை, எல்லையற்ற அல்லது தணிக்கை ஆகியவை இணைந்தால் சமூக ஊடகங்கள் விளையாட்டுகளுக்காகப் பிறந்தன என்று கூறலாம்.

எங்கள் கவனம் சமூக ஊடகங்களில் இந்த குழப்பத்தில் உள்ளது. ஜனாதிபதி தேர்தலுக்கான பிரசாரப் பணிகள் முடிந்து விட்டதாக சட்டப்படி கூறப்பட்டாலும், இவற்றுக்கு விதிமுறைகள் இல்லை. அவர்களில் ஒருவர் சிக்கலில் சிக்கியவுடன், மற்றவர்களும் அதற்கு ஆடை அணிவார்கள். இது போன்ற குழப்பங்கள் நான்கு கைகளில் இருந்து வரும்போது, எல்லா மனங்களும் பொய்களால் மூடப்படும். மோசமான தகவல்களை வழங்குவது மட்டுமல்லாமல் வெறுப்பையும் உருவாக்குவதும் இந்த வழியில் செய்யப்படலாம்.

சமூக வலைத்தளங்களில் பொய்ப் பிரசாரம் செய்து மக்கள் மனதைக் குழப்பிய இரண்டு ஜனாதிபதித் தேர்தல்கள் பற்றி உலகமே பேசுகிறது. 2020 அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில், ட்ரம்ப் மற்றும் பிடென் சமூக ஊடகங்களை வன்முறையில் பயன்படுத்தினார்கள்.

இலங்கையில் 2019 ஜனாதிபதித் தேர்தலும் சமூக ஊடகங்களில் போலியான தகவல்கள் பாய்ந்த காலம். போராட்டத்தின் போதுதான் இந்த இரண்டையும் விட வித்தியாசமான முறையில் தவறான செய்திகள் பரப்பப்பட்டன. 2021 மியான்மர் இராணுவம் அந்நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றியது. அதற்காக சமூக வலைத்தளங்களில் பொய்யான தகவல் பரப்பப்பட்டது. 2022ஆம் ஆண்டு பிரேசில் ஜனாதிபதித் தேர்தலில் பல தவறான தகவல்கள் பரப்பப்பட்டன. அதற்கும் சமூக ஊடகங்கள் பயன்படுத்தப்பட்டன.

சிலர் அதிகாரத்திற்காக எந்த ஒரு செயலிலும் ஈடுபடும் பருவம் இது. மறுபுறம், சீர்குலைக்கும் மனதுடன் பல நோயாளிகளும் உள்ளனர். புதன்கிழமை (18) நள்ளிரவு முதல் மௌன காலம் கடைப்பிடிக்கப்பட வேண்டுமானால், தேர்தலின் போதும், தேர்தலுக்குப் பின்னரும் இந்த நாட்டில் அமைதி நிலவ வேண்டுமானால், சமூக ஊடகங்களில் வலுவான வடிகட்ட வேண்டும். இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முதலில் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது குற்றம்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# வாக்காளர்கள் தேர்ந்தெடுப்பது எஜமானரை அல்ல

**முருகானந்தம் தவம்**

இலங்கையில் கடந்த 2019இல் நடந்த 8ஆவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தலில் வாக்களிப்பதற்கு 1,59,92096 வாக்காளர்கள் தகுதி பெற்றிருந்த போதும், 1,33,87951 வாக்காளர்கள் மட்டும் வாக்களித்திருந்த நிலையில், 26,04145 வாக்காளர்கள் வாக்களிக்கவில்லை. இந்தளவு தொகை வாக்குகளானது, ஒரு தேர்தலில் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியது என்பதை இவர்கள் தெரியாதிருந்துள்ளனர் என்றே கருத வேண்டியுள்ளது. இந்தமுறை ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு 1,71,40354 பேர் தகுதி பெற்றுள்ளனர். இவர்களில் சனிக்கிழமை (21) நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்காமல் விடுவோரின் எண்ணிக்கை, கடந்த முறையை விடவும் அதிகரித்து விடுமோ என்ற ஒரு ஜனநாயக அச்சம் ஏற்பட்டுள்ளது.

வாக்களிப்பது எமது கடமை மட்டுமல்ல, எமது உரிமையும் கூட. அதாவது, வாக்குரிமை என் வாழ்வுரிமை என்று கூட சொல்லலாம். இந்த நாடு நமக்கு அளித்த இந்த உரிமையைச் சரியாகப் பயன்படுத்துவது நமது தலையாய கடமை. நம்மை 5 ஆண்டுகள் யார் ஆளப் போகிறார் என்பதைத் தீர்மானிக்கும் எமது வாக்குரிமை என்னும் ஆயுதத்தை நாம் பயன்படுத்தத் தவறக்கூடாது. இந்த நாட்டின் தலையெழுத்தைத் தீர்மானிக்கக் கூடிய வலிமை உள்ள எஜமானர்கள், வாக்காளர்களாகிய நாம் தான். நம்மை யார் ஆளப் போகிறார்? என்று தீர்மானிக்கக் கூடிய அதிகாரத்தை விரல் நுனியில் எழுதப் போகும், இந்த நாட்டிற்கான தீர்ப்பை நாம் ஒரு நாள் நீதிபதிகளாக இருந்து எழுத மறுக்கக்கூடாது.

நான் சுயமாக உழைக்கிறேன், சுயமாகச் சம்பாதிக்கிறேன், சுயமாக என் வாழ்க்கைப் பாதையை அமைத்துக் கொண்டேன், அப்படி இருக்கும்போது, அரசின் உதவி எனக்கு எப்போதும் தேவையில்லை. அவ்வாறிருக்க நான் ஏன் வாக்களிக்க வேண்டும் என்று சிலரது மனமும், இன்னொரு சாரார் குறிப்பாக இளம் தலைமுறையினர் மாற்றம் வேண்டும் என்று முழக்கமிடும் அதேவேளையில், தங்களது பேஸ்புக் மீம்ஸ்களின் மூலம் மட்டுமே திருப்தி அடைந்து கொள்வதுடன், நின்று விடுவதனூடாக ஒரு புதிய ஜனநாயகப் பாதையை அமைப்பதற்கும், அதைச் செப்பனிடுவதற்கும் தவறி விடுகிறோம் என்பதை நாம் உணர்வதில்லை.

ஏனென்றால், நாம் உபயோகப்படுத்தும் ஆடையிலிருந்து, சொப்ட்வேர் பொருட்கள் வரை அனைத்திலும் அரசியல் மற்றும் அரசாங்கத்தின் பங்கு ஓர் இன்றியமையாததாக இருக்கிறது. ஆகவே, அவற்றைத் தீர்மானிக்கக் கூடிய இடத்தில் நாமும் இருக்க வேண்டுமென்றால், வாக்குரிமையை நாம் பயன்படுத்தியே ஆக வேண்டும். வாக்களிக்கும் போது, எனது பிரதிநிதியைத் தீர்மானிக்கும் தகுதி வாக்காளர் என்ற ரீதியில் எனக்கிருப்பது பெருமைக்குரியது. இந்த நாட்டில் எனக்கான பிரதிநிதியை, எனக்கான அரசைத் தீர்மானிப்பதாக எனது வாக்குரிமையைப் பயன்படுத்துவதில் ஏன் நாம் பின்னடிக்கின்றோம்?

சங்ககாலம் முடியாட்சி, நிகழ்காலம் குடியாட்சி. எல்லோரும் இந்நாட்டு மன்னர் எனக் குறிப்பிடுவது சங்ககாலத்தில் அது சாத்தியமாகுமா? நிகழ்காலத்தில் அது சாத்தியமாகிறது. ஆகவேதான், நமது உரிமையை மீட்டெடுப்பதற்கான ஒரு தருணமாகவே இதை நாம் பார்க்க வேண்டும். ஒரு திறமையான அரசாங்கமும், அது சார்ந்த அமைப்புகள் அமைவதற்கு நாமும் ஒரு தொடக்கப் புள்ளியாக இருந்தோம் என்பது சமகாலத்தில், நீண்ட ஜனநாயக தேரை இழுத்துச் செல்வதில், நமக்கு ஒரு பங்களிப்பு இருக்கிறது என்பதை உணரச் செய்யும் வெளிப்பாடுதான் வாக்களிப்பது என்பதாகும்.

எனக்கு எதற்கு அரசியல்? அதில் எனக்கு விருப்பமில்லை. ராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன, எனக்கு ஒன்றும் கவலையில்லை என்பதே வாக்களிக்காதோரின் கருத்தாக உள்ளது. 100 சதவீத வாக்குப் பதிவைப் பெறுகின்ற போது தான் முழுமையான ஜனநாயகம் நமக்கு வந்தடைகிறது என்று நாம் எப்போது உணரப் போகிறோம்? சில பேர் நாங்கள் தெளிவான முடிவை எடுக்கிறோம் என்று சொல்லி வாக்களிக்காமல் தங்களையே ஏமாற்றிக் கொள்கிறார்கள். திறமையான ஒரு வேட்பாளரை, நாங்களே தேர்ந்தெடுக்க வேண்டும். அந்தத் திறமையான வேட்பாளரை ஊக்குவிப்பதும் மக்கள் பணி செய்கிற சேவகரை அடையாளப்படுத்துவது, நமது பங்கு என்பதையும், நமது உரிமை என்பதையும் ஒருபோதும் விட்டுக் கொடுக்கக் கூடாது.

நாம் வாக்களித்தவர் வெற்றி பெற்ற பிறகு, கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில்லை என்ற குற்றச்சாட்டுகள் வெளிவருவது தவிர்க்க முடியாதது.

அப்படி இருக்கையில், நாம் எதற்காக வாக்களிக்க வேண்டும் என்பதும், இல்லை அது தவறு, நமது கடமையைச் செய்துதான் ஆகவேண்டும் என்று சிலர் கூறுவதுண்டு. வாக்களிக்காமல் வீட்டிலேயே உட்கார்ந்திருந்தால், கால்வாய் சரியில்லை, வீதி சரியில்லை, போக்குவரத்து வசதிகள் கிடையாது, எமது கிராமத்துக்கு அபிவிருத்தி இல்லை என்று புலம்பினால் சரியாகி விடுமா? என்று கேட்பவர்களும் உண்டு. சரி, வாக்களித்தால் மட்டும் இவை எல்லாம் சரியாகி விடுமா? என்று கேட்பவர்களும் உண்டு.

> **“திறமையான ஒரு வேட்பாளரை, நாங்களே தேர்ந்தெடுக்க வேண்டும். அந்தத் திறமையான வேட்பாளரை ஊக்குவிப்பதும் மக்கள் பணி செய்கிற சேவகரை அடையாளப்படுத்துவது, நமது பங்கு என்பதையும், நமது உரிமை என்பதையும் ஒருபோதும் விட்டுக் கொடுக்கக் கூடாது**

வாக்குரிமை என்பது மனிதனின் அடிப்படை உரிமை . ஆனால், அதனைக் கட்டாயமாக்க முடியாது. ஏனெனில், வாக்களிப்பது எப்படி ஒருவரின் உரிமையோ, அதே போன்று வாக்களிக்காமல் இருப்பது அவரின் உரிமை என்று சிலர் முழக்கமிடுவதும் உண்டு. பெரும்பாலும் படித்தவர்கள் பக்கம் இருந்தே இந்தக் கருத்து மேலெழுகிறது. ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கை பாமரர்களிடம் இருக்கும் அளவுக்கு, படித்தவர்களிடம் இல்லையே என்று எண்ணத் தோன்றுகிறது. தேர்தல் நேரங்களில் வாக்களிக்காமல் இருந்து விட்டு, பின்னர், ஆட்சியாளரைக் குறை கூறுவது எந்த வகையில் நியாயம்?

அயோக்கியர்களின் கடைசி புகலிடம் அரசியல் என ஒட்டுமொத்த அரசியலையும் நாம் புறந்தள்ளி விட முடியாது. ஒன்றை நிராகரிக்கவும், ஒன்றை உருவாக்கவும் கூடிய பெரும் பொறுப்பு நம்மிடம் இருக்கிறது. அதுவும் முதன்முறை வாக்களிக்க வரும் இளம் வாக்காளர்களிடம் அவை அதிகமாகவே இருக்கின்றன. எனவே, சலிப்பையும், அவநம்பிக்கையும் ஒதுக்கிவிட்டு, வாக்களிப்பதன் அவசியத்தையும் ஜனநாயக உரிமையையும் காக்க வேண்டும். அதாவது, எதிர்காலத்தைத் தீர்மானிப்பது நமது நிகழ்கால அரசியல். நமது எதிர்காலம் எப்படி இருக்க வேண்டும் என்று நாம் எப்படி கனவு காண்கிறோமோ, அந்தக் கனவை நிகழ்காலத்து அரசியலோடு கூர்ந்து பொருத்திப் பார்ப்பது உங்கள் விரல் நுனியில் இருக்கும் ‘மை’யில்தான் அடங்கியிருக்கிறது.

ஜனநாயக நாட்டில் கல்வி, மருத்துவம், உணவு, வேலைவாய்ப்பு என நம் தேவைகள் ஏராளம் உள்ளன. இவை அனைத்தும் நாம் தினமும் வீட்டிலிருந்து விமர்சிப்பதால் மட்டும் கிடைத்துவிடாது. இவை அனைத்தும் நமக்குத் தடையின்றி உரிய வகையில் கிடைக்க வேண்டுமென்றால், அதற்கு ஒரு நல்ல தலைமையை நாம் கொண்டு வர வேண்டும் என்பதையும் அறிந்திருக்க வேண்டும். இதற்கு முன் இருந்தவர் என்ன செய்துள்ளார். இனி வாக்களித்தாலும் வரப் போகிறவர் என்ன செய்யப் போகிறார் என்பதை நன்கு சிந்திக்க வேண்டும். மக்கள் தொண்டன் யார்? என்பதை அனைவரும் அவசியம் தெரிந்து வாக்களிக்க வேண்டும். போட்டியிடும் வேட்பாளர் யார் என்பதை நன்கு படித்து அவருக்குக் குற்றப் பின்னணி இருக்கிறதா? இதற்கு முன் சமூகத்திற்கு என்ன செய்திருக்கிறார்? இவரால் நாட்டுக்கோ, மக்களுக்கோ நன்மை இருக்கிறதா என தெரிந்து அவர்களை அடையாளம் கண்டு வாக்களிக்க வேண்டியது நம் கடமை.

எங்கள் வாக்குகளை எங்கள் வாழ்வுரிமையாகவும் எங்கள் ஆயுதமாகவும் நாம் பயன்படுத்த வேண்டும். எமக்குத் துரோகம் செய்பவரை, எம்மை ஏமாற்றுபவரை, தண்டிக்கவும், எமக்கு நன்மை செய்பவரை,எமக்காகக் குரல் கொடுப்பவரைத் தெரிவு செய்யவும் 5 வருடங்களுக்கு ஒருமுறை கிடைக்கும் இந்த வாக்குரிமை என்னும் ஆயுதத்தைப் பாவிப்பதிலிருந்து நாம் ஒருபோதும் தவறி விடக்கூடாது.

மக்கள் எதிர்கொள்ளும் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு அவர்களிடம் இருக்கும் ஒரே ஆயுதம் வாக்கு தான். இந்த வாக்குகள், தோட்டாக்களை விட, அரசு அச்சடிக்கும் ரூபாய் நோட்டுகளை விட வலிமையானது பலம் வாய்ந்தனவாகும். பல வாக்காளர்கள் தங்களது வாக்கின் வலிமை தெரியாது, அவநம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். இந்த வாக்குகளின் மகத்துவம் புரியும்போது, வாக்காளர்கள் எவ்வளவு அதிகாரம் பெற்றவர்கள் என்ற புரிதல் ஏற்படும். வாக்காளர்களில் பலர், முழுமையாகப் புரிந்து கொள்ள வேண்டிய இன்னொரு முக்கிய விஷயம் ஒன்று உண்டு. அதாவது, வாக்காளர்கள் தேர்ந்தெடுப்பது அவர்களது பிரதிநிதியைத்தான்-எஜமானரை அல்ல என்பதுதான்.



## வாழ்வியல் தரிசனம்

உயிர் உள்ள போதுதான் உறவுகள் என்கின்றனர். அது பொய்! எமது உறவுகள், எங்கள் பரம்பரையினர் இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டு இடம்பெற்ற அழிப்பில் எங்களை விட்டு ஏகினர்.

இந்தச் சோகம், எங்களை இன்னும் வாட்டுகின்றது. தமிழர்கள் முப்பது ஆண்டுகளாகத் தங்களது உரிமைகளுக்காகப் போராடினார்கள். தொடர்ந்து முப்பது ஆண்டுகளாக எந்த வசதிகளும் இல்லை. மின்சாரம், எரிசக்தி என எவையும் எமக்குக் கிடைக்கவில்லை. நடந்த கொடுமைகளைச் சொல்லி முடியாது.

கண்ணாடிப் போத்தலில், தேங்காய் எண்ணெய்யில், திரி அல்லது கடதாசி வைத்து, விளக்கு எரித்துப் படித்தார்கள். அந்த நிலையிலும் கல்வியை எமது மாணவர்கள் கைவிடவே இல்லை.

எந்த நேரமும் குண்டுச் சத்தங்கள், அடிக்கடி மரணங்கள், மரண ஓலங்கள்; கோவில், தேவாலயங்கள் என எவற்றையும் பேரினவாதம் கண்டுகொள்ளவில்லை. பல தேவாலயங்களில் குண்டுவீச்சு. வாகன வசதிகள் இல்லை. சைக்கிள் பயணங்கள்தான்! பயணமே பயங்கரம்.

ஆனால், எம்மவர்கள் சளைக்கவில்லை. விவசாயம் செய்தனர். போர்க்காலத்திலும் எங்களை நாங்கள் பார்த்துக்கொண்டோம்.

தற்போது என்ன நடக்கிறது? எமது நாட்டின் நிலையை உலகமே அறியும். அநியாயம் நிலைக்காது என ஆன்மிகம் சொல்லுகின்றது.

நன்றி- பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### மின்சார வசதி இன்றி தவிப்பு

மீன் பாடும் தேனாடு’ எனும் பெருமை பெற்று விளங்குகின்ற மட்டுமா நகரில் சுற்றுலா பிரசித்தி பெற்று விளங்குகின்ற பாசிக்குடாவில் கடற்கரை வீதி ஓரங்களில் சிறு கடை வியாபாரம் செய்யும் வியாபாரிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

கடந்த 20 வருட காலமாகப் பாசிக்குடாவில் சிறு கடை வியாபாரம் செய்து வரும் இவர்களுக்கு, இதுவரையிலும் மின்சார வசதிகள் பெற்றுக் கொடுக்கப்படவில்லை. இதனால், இரவு வேளைகளில் மிகவும் சிரமப்படுகின்றனர்.

இப்பிரச்சினைகள் தொடர்பில், சுற்றுலாத்துறை, பிரதேச சபையிடம் தெரிவித்து இருந்தோம். ஆனால், அதற்கு எந்த வித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்றனர்.

இரவு வேளைகளில் இருட்டு, பகல் வேளைகளில் வெயில், இதன் காரணமாகத் தகரக் கொட்டகைக்குள் இருந்து வியாபாரம் செய்ய முடியாமல் இருக்கிறது.

இந்நிலையில், இந்த வருடத்துக்குரிய வியாபார உத்தரவு பத்திரம் கூட இன்னும் வழங்கவில்லை. ஆகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எங்களின் நிலையைக் கருத்தில் கொண்டு அதற்குத் தகுந்த தீர்வு ஒன்றைப் பெற்றுத் தருமாறு சிறிய கடை வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– அனிதா



# அணிலாடும் முன்றிலும் நானும்



சந்திரகுமார் யதுஷினி,
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

நம்ம மன உணர்வுகளுக்குத் தீனி போடுற வகையில, ஏதோவொரு பாடல் வரியையோ, வசனத்தையோ படிக்கவோ, கேட்கவோ நேர்ந்தால் சில நேரங்களில் அதே பாடல் வரி, வசனம் நமக்கான ஊக்க மருந்து போல மாறிடும். அதை மறுபடியும் கேட்கிற நேரத்தில அட! இது நமக்கு பிடிச்ச பாடல் வரியாச்சே அப்படின்னு யோசிப்பம். அப்போதான், அந்த வரிகளுக்கு சொந்தக்காரருடைய முகம் ஒரு நிமிசம் நம்ம மனசில தோன்றி மறையும். அப்படி ஒரு தேடலின் போது, தெரிந்து கொண்டவர் தான் தென்னிந்திய திரைப்பட பாடலாசிரியர் நா.முத்துக்குமார்.

"ஒரு நாளில் வாழ்க்கை இங்கே எங்கும் ஓடிப் போகாது, மறு நாளும் வந்து விட்டால் துன்பம் தேயும் தொடராது…" என்ற பாடல் வரிகளை நண்பனின் புலனப் பதிவில் (whatsapp status) பார்த்தபோதுதான் நா.முத்துகுமார் நினைவுக்கு வந்தார். அப்பொழுதுதான் நா.முத்துக்குமாரைப் பற்றி அறிந்துகொள்ளும் ஆர்வத்தில், கூகுளில் (Google) தேடல் தொடங்கியது. மனித வாழ்வின் ஒவ்வொரு நிகழ்வையும், பருவத்தையும், நம்பிக்கையையும், உணர்வுகளையும் பாடலாசிரியர், நா.முத்துகுமாரின் பேனா வெளிப்படுத்தியிருந்ததைக் காணக் கிடைத்தது. மகள், தாய், தந்தை, காதல், துள்ளல் பாட்டென எல்லாவற்றிலும் அழகியலையும் நம்பிக்கையையும் விதைத்திருந்தார்.

எளிமையும், யதார்த்தமும் நிறைந்த எழுத்துக்களால் தனியிடம் பிடித்து 41 ஆண்டுகளில் உலகை விட்டு நீங்கினாலும், பாடல்கள் மற்றும் புத்தக எழுத்துக்களில் நா.முத்துக்குமார் வாழ்வதாகவே எனக்கு தோன்றியது. வேடிக்கை பார்ப்பவன், பட்டாம்பூச்சி விற்பவன், ஆனா ஆவன்னா, குழந்தைகள் நிறைந்த வீடு, என்னை கனவில் சந்திக்க வராதே என நீளும் புத்தகங்கள் வரிசையில் அணிலாடும் முன்றில் என்னும் தலைப்பிடப்பட்ட நா.முத்துக்குமாரின் புத்தக அட்டை கண்களில் தென்பட்டது. 'அணிலாடும் முன்றில்' புத்தகத்தின் பெயரை வாசிக்கும் போதே, வாசிக்க வேண்டுமென்ற உணர்வு ஆட்கொள்ள புத்தகத்தை தேடினேன். கண்களில் படவில்லை. நண்பி ஒருவர் மூலம் அணிலாடும் முன்றில் கிடைக்கப்பெற்றது.





ஆனந்த விகடன் இதழில் நா.முத்துகுமார் தொடராக எழுதிய இருபது கட்டுரைகளின் தொகுப்பை உள்ளடக்கியதாகவே அணிலாடும் முன்றில் அமைந்திருந்தது. தான் பிறந்த தாயிலிருந்து தன்னால் உதித்த சேய் வரைக்குமான இடைப்பட்ட காலகட்டத்தில் தான் வாழ்ந்து கடந்துவந்த, குடும்ப உறவுகளையெல்லாம் நேர்மறைத்தன்மையோடு அத்தனை அழகாகச் சிலாகித்திருந்தார். அம்மா, அப்பா, அக்கா, தம்பி, தாய்மாமன், அத்தை, தாத்தா, சித்தி, அண்ணன், தங்கை, பங்காளிகள், பெரியம்மா, மாமன்கள், முறைப் பெண்கள், சித்தப்பா, அண்ணி, மைத்துனன், மனைவி, மகன் என்று தன்னுடைய தனித்துவமான எழுத்துப்பாணியில் உறவுமுறையின் பரிமாணங்களை வெளிப்படுத்தியிருந்த விதமே அணிலாடும் முன்றிலை தொடர்ந்து வாசிக்க உந்துதலை அளித்தது.

மேற்கோளிட்டு தொடங்கும் இருபது குடும்ப உறவுகளுக்குமான நினைவுத் தடங்களை எடுத்தாளும் விதத்தில் இளமைப் பருவ பாதைகளில் ஒவ்வொருவரும் கடந்ததும் இழந்ததுமென தொலைந்துபோன அத்தனை அன்பின் முகவரிகளும் கண்முன்னே ஒரு கணம் நிழலாடிச் செல்வதை உணரமுடிந்தது. மனித உறவுகளையும், சின்னச் சின்ன விடயங்களிலிருந்து உருவாகும் உணர்வுகளையும் நுட்பமாகக் கையாண்டு உறவுகளின் மேன்மையை ஆத்மார்த்தமாக சொல்லியிருந்தார்.

## அம்மா

லா.ச.ராமாமிருதத்தின் வரிகளை மேற்கோளிட்டு தொடங்கும் அம்மாவின் நினைவுகளில் அவரவர் அம்மா நிறைகின்றனர். தன் தாயின் இறப்பின்போது பக்கத்து வீட்டு மாமியின் ஆறுதலில் தின்னக் கிடைத்த கரும்பு, அந்த நிகழ்வுக்குப் பின் தனக்கு எப்போதுமே இனிக்கவேயில்லை அந்தக் கரும்பு என்ற வரிகளில் தனது தாயின் இழப்பிலான வலிகளை பகிர்கிறார்.




## அப்பா

ஆபிரிக்கப் பழங்குடிப் பாடலொன்றை மேற்கோளிட்டு அன்புள்ள அப்பாவுக்கு என்று தொடங்கும் கடிதத்தின் மூலம் சிறுவயதில் சைக்கிள் ஓடும்போது, தன்னுடைய அப்பா பிடித்துக்கொண்டிருப்பதாக நினைத்தே ஓடியதுபோல, இப்போதும் தன் அப்பா பிடித்துக்கொண்டிருப்பதாகவே நினைத்து ஓடிக்கொண்டிருக்கிறேன் என விடாது பற்றிக்கொண்டிருக்கும் அப்பாவின் நினைவுகளை குறிப்பிட்டு அப்பா எனும் உறவை நினைவில் நிறுத்துகிறார்.

## அக்கா

கலாப்பிரியாவின் வரிகளை மேற்கோளிட்டு தொடங்கும் அக்கா குறித்தான எழுத்துக்களில் அக்காவின் நிழலொத்த முகமெல்லாம் ஒரு கணம் நினைவில் ஒளிர்ந்தோடுகிறது.

## தம்பி

ஜோன் ஆஸ்டின் வரிகளை மேற்கோளிட்டு தோளில் தொற்றிக்கொண்ட வேதாளத்திற்கு பதிலளிப்பது போல, தனக்கும் தம்பிக்குமான உறவை வெளிப்படுத்தி இருந்தார். 'எந்தத் திசையில் வீசினாலும் காற்றின் ஈரம் காற்றில் இருப்பதைப்போல, பிரிந்திருந்தும் சேர்ந்திருப்பதுதான் சகோதரத்துவம்…' எனும் வரிகளில் நம்முடன் பிறந்திருப்பவர்களுடனான யதார்த்தமான அன்பின் பரிணாமம் இழையோடியிருந்தது.

இவ்வாறு, தங்கை, அத்தை, மனைவி, மகன், தாய்மாமன், தாத்தா, சித்தி, அண்ணன், தங்கை, பங்காளிகள், பெரியம்மா, மாமன்கள், முறைப் பெண்கள், சித்தப்பா, அண்ணி, மைத்துனன் என நீளும் ஒவ்வொரு உறவையும் வாழும் நாளை உயிர்ப்போடு கடத்தும் அதன் மாயங்களையும் அத்தனை அழகாக எழுதியிருக்கிறார்.

நா.முத்துக்குமார் உரசிப் பார்க்கும் வரிகளில் நம் மனங்களும் இதுபோன்ற நமது பக்கங்களையும் புரட்டிப் பார்த்தே மீளுகிறது. குறிப்பாக தந்தை நள்ளிரவில் வாங்கி வரும் தின்பண்டங்களை, எழுப்பி அப்பொழுதே ஊட்டிவிடுவார் என நா.முத்துக்குமார் பகிர்ந்திருக்கின்ற நினைவை படிக்கும்போது, என்னுடைய அப்பா சிறுவயதில் வாங்கி வரும் தின்பண்டங்களை எனது தலையணையின் கீழ் வைத்து காலையில் முதல் வேலையாக அதனை சாப்பிடத்தருவது நினைவிற்கு வந்து மனதை நெருட, இப்பொழுதெல்லாம் "பொருளாதாரத்துக்காக குடும்பங்கள் தனித்தனி குடும்பங்களான பிறகு மீண்டும் தங்களது பழைய உறவுகளை நினைத்து ஏங்கி தவிப்பதை பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றோம்" என்று அணிலாடும் முன்றிலின் ஆசிரியர் உரையில் கூறப்பட்டிருந்த ஆரம்பவரிகள் உண்மையாகிப்போனதும் நினைவிற்கு வந்தது.

உறவுகளைப் பற்றி வரிக்கு வரி நல்லதையே பகிரும், நா.முத்துக்குமாரின் அணிலாடும் முன்றிலை வாசிக்கும்போது, சுக துக்கங்களில் நம்மை தாங்கிப் பிடித்து தேற்றவும், கொண்டாடவும் என்னோடு சேர்ந்து வருவார்கள் என்றிருந்த உறவுகள் காலவோட்டத்தில் பேசாமல் போனதும், அம்மா, அப்பா, தம்பி தங்கை என தனித்து விடப்பட்ட வாழ்வும் அணிலாடும் முன்றிலின் சில பக்கங்களை புன்னகையோடு மட்டும் புரட்ட, வழி செய்தது.

"இளம் வயதும் அனுபவமும் இன்னும் கொஞ்சம் நிறைகளோடும் இதயம் மறக்க நினைக்கும் குறைகளோடும் இன்றைக்கு இதே உறவுகளை வேறு பார்வையில் திருப்பிக் காட்டுகின்றது. ஒவ்வொரு வயதிலும் வெவ்வேறு தோற்றம் காட்டும் கண்ணாடி தானோ வாழ்க்கை" என்று நா.முத்துக்குமார் அணிலுரையில் குறிப்பிட்டு இருந்தது மனதில் படிய அணிலாடும் முன்றில் புத்தகப் பக்கங்களை நிறைவு செய்தேன்.

# குரோட்டன்



தமிழுறாள் அனுஷ்திக்கா

அவளுக்கு அதுவொன்றும் புதிதில்லை. எப்போதும் போலத்தான் கைகளால் கண்களின் கண்ணீர் கழிப்பை கன்னம் அழுக்காகாமல் துடைப்பதும், பின் பிறர் காண சிரிப்பதுமென வாடிக்கையாக்கி உள்ளாள். ஆனால், அன்று மட்டும் ஏனோ தெரியவில்லை. அவள் நடிப்பில் ஒரு குழப்பம். நடிப்பிற்கும் யதார்த்தத்திற்கும் இடையே நடந்த கலவரத்தில் நடிப்பு குத்தப்பட்டது யதார்த்தம் வெற்றி பெற்றது. கண்ணீர் மட்டும் சிந்தும் கண்கள் அன்று உண்மைகளையும் வெளியிடத் தொடங்கியது.

"என்னடி கண்ணு ஏதோ மாதிரியா இருக்கா?"

என்ற மச்சாளின் வார்த்தைகள் தான் அந்தக் கலவரத்தை தற்காலிகமாக ஒத்தி வைத்தது. "இல்லடி.. இந்த பள்ளிக்கூட புதினங்கள தான் நினைச்சன். நாளைக்கு திருப்பி ஓடனும்… பாடவேலத்திட்டம் வேற எழுதனும்… எங்கட அதிபர பத்தி வேற உனக்கு தெரியுமே ஒரு வருஷம் சேத்த உண்டியல ஒரேயடியா உடைச்ச மாதிரி கத்துவாரே… அதான் டி யோசிச்சித்து இருந்தன்" என்று சொல்லி முடிப்பதற்குள்,

"அப்போய் எப்ப பாரு பள்ளிக்கூடமும், ஆய்வுக்கூடமும் தான்" என சலித்துக் கொண்டு நகர்ந்தாள். நகரும் அவளை புன்னகைத்து கொண்டு பூந்தோட்டச் செடிகளைப் பார்த்தாள்.

சின்னச் செடிகளில் ரோசாப்பூக்களின் அழகை தேனீக்கள் ஆராதித்துக் கொண்டிருந்தன. கத்தரித்து விட்ட நீண்டு வளர்ந்த முதிர்ந்த குரோட்டன் மரம் பாரம் தாங்காது வளைந்து கிடந்தது. கன்னிகா வளர்த்த நாய்க்குட்டி பாய்ந்து பாய்ந்து அதன் பூக்களுடனான தலைப்பகுதியைப் பிடித்திழுக்க முயன்றது. இதனை பார்த்த படியே நின்றாளே தவிர தடுக்க அவளுக்கும் விருப்பமில்லை.



பார்த்தபடியே நின்றவளை "என்ன மாமி செய்றீங்க குட்டியன் விளையாடுறத பாக்குறீங்களா? ஐஐ… எப்பிடி என மாமி விளையாடுறான்…" கண்ணிகாவிடம் சொல்லியபடி கைத்தட்டி சிரித்து சிரித்து குட்டியனின் சேட்டையை விவரித்துக் கொண்டிருந்தான். கன்னிகாவும் மருமகன் அஷ்வினின் சிரிப்பை ரசித்த படி நின்று கொண்டிருந்தாள்.

வாசலில் "ரிங்… ரிங்…" என்ற சத்தம் கேட்டு அவர்கள் திரும்புவதற்குள்,

"வீட்டில யாரும் இருக்கியலா?…" சத்தம் கேட்டதும் புல்வெளி கண்ட மான் போல துள்ளி ஓடி தபாற்கார மாமாவின் சைக்கிளில் சிக்கிக் கொண்டான்.

"வாங்க டீச்சர் எப்பிடி இருக்கிங்க?" என்று குசலம் விசாரித்த படி ஒரு கடித உறையை கொடுத்தான். வாங்கிய படியே "நல்லம் ரித்திக்காட அப்பா" என்ற பதிலைத் தொடந்து சில மணிநேர இடைவெளிக்கு பின்னர் "உங்களோட கொஞ்சம் கதைக்கனும் டீச்சர்…" என்று கன்னிகாவின் கண்களை ஏதோவொன்றினை கேட்டு இரங்குவதாக நின்றிருந்தார்.

கேட்டவுடனே "அஷ்வின் குட்டி அம்மா கிட்ட ஓடிப்போங்க… அச்சா குட்டி…" என்று அனுப்பி விட்டு, தனது வளவில் வீட்டிற்கு எதிராக சற்று தொலைவில் ஒரு மாம்மரம் நோக்கி நடந்தாள். ஒரு தசாப்தமாகியும் ஒரு மாம்பூ கூட காற்றாலாகினும் அதன் கீழ் விழுந்ததில்லை. இலையுதிர் காலம் தொடங்கினால் 'பழத்த போடாம பழுத்த இலய போடுது கிழட்டு மரம்…" என்று திட்டி தீர்த்தாலும், சூரியக்கொதிப்பில் மழைமேகமாய் குளிர்விக்கும் அந்த மரத்தின் கீழ் கதிரைககளை எதிரெதிரே போட்டு சாவகாசமாக அமர்ந்து கொண்டு, மாங்கனிக்குரலில் "சொல்லுங்க…" என்றாள்.

"இல்ல டீச்சர்… மகள இனிமேல் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புல்ல என்டு முடிவெடுத்திருக்கம்"

திடுக்கிட்டு வியந்த கண்ணிகாவின் " என்ன?… என்னாச்சி…" என்ற விரைவான வினாக்களுக்கு சற்று நேரமெடுத்து, "இல்ல டீச்சர் மகள்ட நடவடிக்கை சரியில்லாம இருக்கு, அதிகமா பொய் சொல்லுறா, எதிர்தெதிர்த்து பேசுறா, போன் அதிகமா பாவிக்கிறா…"

"டீனேஜ் பருவம் ஐயா, நான் சொல்லி உங்களுக்கு தெரியனும் என்றில்ல பிழைகள சொல்லி திருத்துவம் ஆனா படிப்ப விடுற அளவுக்கு வேற ஏதும் இருக்கா?…"

பக்கத்திலிருந்த தென்னம்மரத்து தேங்காய் துடுமென விழுந்தது, வெம்மி வெடித்த சொற்களினால் கண்களும் கரைந்து கண்ணீராகின. கண்ணீரோடு "என்னோட புள்ள இப்படிப் பண்ணுமென்டு நான் எதிர்பாக்கல டீச்சர் சாகுற அளவுக்கு போறளவுக்கு இந்த வயசுக்கோளாது கொண்டு விட்டுத்து…" என்றவரை, தன் அதிர்ச்சியை மறைத்து ஆதரவாக உரையாடினாள். அவளுக்கு ரித்திக்காவை பற்றிய நல்லெண்ணம் உண்டு. பக்கத்து வகுப்பு பிள்ளையானாலும் கெட்டிக்கார பிள்ளையென்று அடையாளப்படுத்ததும் பிள்ளையாகும். பாடசாலையிலுள்ளும் ரித்திகா யாரையோ காதலிப்பதாக, அந்த நபர் பொருத்தமில்லாதவனென்றும் சாடையாக கதை வந்த போதும் அது இந்தளவாக மாறுமென்று கன்னிகா எத்ரர்பார்க்கவில்லை. கன்னிகாயென்ன யாருமே எதிர்பாத்திருக்க மாட்டார்கள்.

ஆறுதலான வார்த்தைகளும், ஆலோசனைகளும் சொல்லி நீண்ட நேர உரையாடலுக்குப் பிறகு,

"உங்க கஸ்டம் எனக்கு விளங்குதுங்க, ஆனா படிக்க வேணாமென்னு சொல்லுறது பொருத்தமில்ல. படிப்பு தான் எல்லாமே அத இழந்தா எதுவுமே இல்ல. இப்ப தானே வளர்ந்து வாரா இன்னும் நிறைய காலமிருக்கு, படிக்க படிக்க அந்த படிப்பு அறிவ தரும் அந்த அறிவு யதார்த்த வாழ்வில நல்லத கெட்டத எடுத்துச் சொல்லும் மனிதர்கள் பற்றிய புரிதல சொல்லும். இதெல்லாம் நடக்கனும் என்றா படிக்கனும்.

"ம்ம்ம்… சரிங்க டீச்சர்" என்று தன் உள்ளக் கிடக்கையைக் கொட்டித் தீர்த்து ஆறுதலடைந்தார். ரித்திக்காவின் வகுப்பாசிரியர் தனிப்பட்ட விடுமுறையில் இருப்பதாலும் கன்னிகா பெண்ணாசிரியராக இருப்பதாலும் கண்ணிகா பற்றி தெரிந்திருப்பதாலும் தன் மகள் தொடர்பாக விடையங்களைப் பரிமாறினார்.

நன்றி சொல்லி விடைபெற்ற பின்னர், மூளையில் அசை போட்ட வண்ணம் நடந்து கொண்டு வீட்டிற்கு நுழைய எத்தனிக்கும் போது, வழியில் குரோட்டன் செடிகளுக்கு தண்ணீர் ஊற்றிய படி நின்ற கன்னியாவின் அம்மம்மா "என்னவாம்..?" என்று விசாரிக்க,

"என்னோட பள்ளிக்கூட பிள்ளைட அப்பா. அவர்ட பிள்ளைட லவ் பிரச்சனை. அது தொடர்பா பேசிட்டு போனாரு…" என்று முடிப்பதற்குள்,

"ஓஓஓ… விரும்பினா பேசி வைக்கிற தானே! பருவம் தாண்டினா கலியாணத்துக்கு மாப்பிள்ள கிடைக்கிறது கஸ்டம். பிறகு பெத்தவங்களுக்கு தான் ஊராக்கள் அத இத பேசுவாங்க ஏனிந்த அரியண்டங்கள் காலாகாலத்துக்கு எல்லாம் முடிஞ்சிறனும்…"

மீண்டும் கன்னிகாவின் நாய் குரோட்டனை நோக்கி ஓடி வந்தது.

அம்மம்மாவின் கதைகளுக்கும் பழகிப்போன காதுகள். கண்ணீரை தனக்குள் அடக்கிக்கொண்ட கண்கள், மௌனத்தை நிறைத்துக் கொண்ட தொண்டை. இவைகளுக்கு இதொன்றும் புதிதில்லை.

மீண்டும் அதே ஆழ்ந்த யோசனைக்குள் சென்றாள். தான் ஆசிரியராகி முதலாவது கற்பித்த பாடசாலையில் உயர்தரம் கற்ற தனது சொந்தக்கார பிள்ளையும் தன்னால் பல்கலைக்கழகம் சென்ற பிள்ளையுமான தனது மாணவியின் திருமண அழைப்பிதழ் அவள் முன் கிடந்தது.

இப்போதெல்லாம் திருமண வீடுகளுக்கு செல்வதென்றாலே அவளுக்கு மரண வீடுக்கு செல்வது போன்ற உணர்வு ஏற்படுகிறது. வருகிற போகிற எல்லோரும் "எப்ப கலியாணம்?" "எப்ப கல்யாண சாப்பாடு?" என்ற கேள்விக்கு என்ன பதில் சொல்லாமென யோசித்தே களைத்துப் போயிருப்பாள். அப்பா இல்லாது கஸ்டப்பட்டு படித்து பல்கலைக்கழகம் சென்று ஆசிரியராகி எட்டு வருடம் அர்ப்பணிப்போடும் ஆத்மாத்தமாகவும் கற்பித்து, குடிசை வீடை ஊரவர் உயர்ந்து பார்க்கும் குட்டி கோபுரமாக்கி குடும்ப கடன்களையெல்லாம் தீர்த்து கஸ்டப்படுகின்ற பிள்ளைகளுக்கு படிப்புக்கு உதவி செய்து பலரை நல்ல நிலைக்கு உயர்த்திய தனக்கு திருமணம் என்ற ஒற்றை வார்த்தை இதயம் நறுக்கும் கத்தியாகி அறுத்தறுத்துக் கொள்வதை அவளால் எத்தனை நாட்களுக்கு தான் பொறுத்துப் போக முடியும்.

திருமணம் குறித்த கேள்விகளுக்கு சிரித்து கொண்டே சமாளித்து சமாளித்து அவளுக்கு சலிப்பை தவிர வேறெதுவும் அமைவதில்லை. அவள் மீது யாருக்கும் காதல் வரவில்லை என்றில்லை. அவள் காதலை விட கடமையை அதிகம் நேசித்தாள். ஆண்களை பணம் கொடுத்து வாங்கும் நம் சமூக சந்தை அவளுக்கு மடமையாய் தோன்றியது. இவளின் முற்போக்கும் தெளிவும் திருமண சூழலுக்குள் சிக்கும் நவீன பெண்ணடிமையாளர்களுக்கு புரிவதில்லை தான்.

அவள் தனது மாணவியின் திருமணத்திற்கு செல்வதற்காகவே விடுமுறை எடுத்திருந்தாள். ஆனால் செல்வதா? வேண்டாமா? என்ற குழப்பத்திற்குள் இருந்தாள்.

"எவனோ ஒருவன் வாசிக்கிறான் இருட்டில் இருந்து நான் யாசிக்கிறேன்.." என்று அவளது தொலைபேசி ஒலித்தது. விரக்தியின் விகாரத்தில் தான் அழைப்பை எடுத்தாள்.

"டீச்சரம்மா ரொம்ப நன்றிம்மா. நீங்க மட்டும் இல்லன்னா என்னோட பிள்ளை இவ்ளோ தூரத்துக்கு வந்திக்க மாட்டா" கால் ஏலாத புள்ள எண்டு எல்லாரும் ஒதுக்கி வச்சப்ப, நீங்க தான் எங்கட புள்ளையோட கூட இருந்திங்க, இப்பதான் கடிதம் வந்திச்சி, ரித்திக்காட அப்பா தான் வந்து தந்துட்டு போனாரு, நம்ம புள்ள புத்;தாக்கப் போட்டியில தேசிய மட்டத்துக்கு தெரிவாகியிருக்காம். ரொம்ப நன்றிம்மா. நீங்க டீச்சர் என்றத தாண்டி புள்ளைகளுக்கு படிப்பால வாழ்க்க குடுக்கிற தாய்தான்ம்மா…" என்று மூச்சு விடாமல் ஆனந்த கண்ணீர் விட்டழுத தாயின் களிப்பில், கன்னிகாவும் தாயானாள் போல,

கொஞ்ச நேரம் கைகளுக்குள் முகம் புதைத்து கண்ணீர் விட்டவள், திடீரென எழுந்தாள். எழுந்த வேகத்தில் கதிரையும் பயந்து நகர்ந்தது. முகத்தை கைகளால் துடைத்துக் கொண்டு, விரிந்து கிடந்து ஆரவாரித்த கூந்தலை அள்ளியெடுத்து கொண்டையாக்கி அடக்கி, அடுத்த பாடவேளைக்கு கம்பீரமாய் நடக்கும் கன்னிகா டீச்சர் போல குளியறைக்குச் சென்றாள்.

வெளியில் அம்மம்மா குரோட்டனுக்கு தண்ணீர் ஊற்றிக் கொண்டு தான் இருந்தார். குட்டியன் அஷ்வினோடு விளையாடிக் கொண்டிருந்தது.

உண்மையற்ற கதைகளை கூறி

# “ஏமாற்ற முடியாது”



சிவனு சத்தியமூர்த்தி (நிருவாக அதிகாரி)
MBA (Sp) Hons in General Management
(Brittany University)
PGDip in (Busi Mgmt); Dip in (HRM); Dip in (OA)



இதுவரை காலமும் ஏமாந்தது போதும், இனியொரு விதி செய்வோம் என்பதைப் போல, மலையக மக்களும் மாற்றத்தை நோக்கி நகர்ந்து விட்டனர். அந்த நகர்வே என்னையும் ஈர்த்து எடுத்தது என தெரித்துள்ள தேசிய மக்கள் சக்தியின் முன்னணி செயற்பாட்டாளர்களில் ஒருவரான மஸ்கெலியாவைச் சேர்ந்த நிருவாக அதிகாரியான சிவனு சத்தியமூர்த்தி, உண்மையற்ற கதைகளைக் கூறி மலையக மக்களை இனிமேலும் ஏமாற்ற முடியாது. ஒருமுறை வீழ்ந்து இருந்தோம் இப்போது எழுந்து விட்டோம் இனிமேல் யாராலும் எம் மலையக மக்களை வீழ்த்தவே முடியாது என்றார்.

எமது ஆசிரியர் பீடத்திடம் விடுத்திருந்த கோரிக்கைக்கு அமைவாக, அனுப்பப்பட்ட கேள்விகளுக்கு எழுத்து மூலமாக அனுப்பிவைத்துள்ள பதில்களிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அதனை கேள்வி, பதிலாக தருகின்றோம்.

**கேள்வி: பிரதிநிதித்துவ மாற்றத்திற்கான காரணம் என்ன?**

இந்த மாற்றம் என்னில் மட்டுமே உருவானது அல்ல, ஒட்டுமொத்த இலங்கை பிரஜைகளின் மத்தியில் இந்த எழுச்சி சாதாரணமாகி விட்டது. ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திசாநாயக்கவின் தேர்தல் கொள்கையும் அவரது தூரநோக்கம் மற்றும் தெளிவான சிந்தனையுடன் கூடிய அபிவிருத்தி திட்டங்களுமே ஆகும்.

அதுமட்டுமல்ல, மலையகத்தில் குறிப்பாக நான் வாழும் மஸ்கெலியா பிரதேசத்தில் கையில் காசு இருந்தால் மட்டுமே மருந்துகளைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது. இங்கு காணப்படும் பொது வைத்தியசாலை வெறும் பெயரளவில் கட்டிடமாக மட்டுமே இருக்கின்றது. இங்கு இருக்கும் பல பாடசாலைகளில் மாணவர்களுக்கு குடிப்பதற்கு தூய குடிநீர் இல்லை, மாணவிகள் கழிவறைக்குச் செல்ல தண்ணீர் இல்லை, இதனால் மாணவிகள் பல்வேறான நோய்களுக்கு உள்ளாகி வருகின்றனர். போதிய வருமானம் இல்லாமையால் தோட்டத் தொழிலாளர்கள் தான் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றனர். இப்போது 20 மற்றும் 21 வயது இளைஞர்களும் கூட வீட்டு வேலைக்கும் மேசன் வேலைக்கும் வெளிநாடுகளுக்குச் சென்று கொண்டிருக்கின்றார்கள். இவை எல்லாமே நான் தினமும் சந்திக்கின்ற உண்மைகள். இவை தான் நம் வளர்ச்சியா? பாடசாலை செல்கின்ற சிறுவனிடம் எவ்வாறு போதைப்பொருள் வந்தது. ஒவ்வொரு முறையும் வாக்களித்த பின்னும் இதில் எந்த மாற்றமும் ஏற்படவே இல்லை. அதுமட்டுமல்ல, இந்த பிரச்சினைகளை உள்ளடக்கிய தேர்தல் கொள்கைகளைக் கூட எவருமே அறிவிக்கவில்லை. இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக மக்கள் நேயமுள்ள ஆட்சியொன்றை கற்றியெழுப்புவதற்கான பெறுமதி மிக்க வாய்ப்பொன்று கிடைத்துள்ளது. இதுவே என் மாற்றத்திற்கான காரணம்.

**கேள்வி: தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் கொள்கையில் ஈர்ப்பு ஏற்பட காரணம் என்ன?**

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் கொள்கையின் தொனிப்பொருளே “வளமான நாடு அழகான வாழ்க்கை” என்பதே ஆகும். இந்த கொள்கை 4 முக்கிய விடயங்களைக் கொண்டுள்ளது. மற்ற கட்சிகளின் கொள்கைகளை இதனுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மலையக மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துகின்ற நம்பகத் தன்மையுள்ள ஒரு கொள்கை பிரகடனமாக இது உள்ளது. அதுமட்டுமல்லாது, இதுவரையில் எப்பொழுதும் நடைபெறாத ஒரு விடயமாக எமது மலையக மக்களுக்காக “தாயகத்திற்கு வலிமை கௌரவமான பிரஜை” என்ற தொனிப்பொருளின் கீழ், தேசிய மக்கள் சக்தியின் மூலம் மட்டுமே ஹட்டன் பிரகடனம் என்ற ஒரு தனி தேர்தல் அறிக்கை ஒன்றை வெளியிடப்பட்டுள்ளது.

**கேள்வி: கொள்கையில் உள்ளடக்கப்பட்ட விபரங்களை விபரிக்க முடியுமா?**

நான்கு பிரதான தலைப்புகளை உள்ளடக்கிய முழு நிறைவான வாழ்க்கை (வசதியான நாடு),

கௌரவமான வாழ்க்கை (பாதுகாப்பான நாடு), நவீன வாழ்க்கை (செல்வம் கொழிக்கும் நாடு) அபிமானமிக்க வாழ்க்கை (நிலைதளராத நாடு), இந்த விடயங்களின் கீழ் இவரது கோட்பாடுகளாகச் சகல இனத்தவர்களினதும் அரசியல் பங்கேற்பு இனம்,மொழி, மதம், சாதி அல்லது பால்நிலை என்பவற்றை அடிப்படையாகக்கொண்டு எந்த ஒரு பிரஜையும்/மக்கள் சமூகமும் அவமதிப்பிற்கோ, துன்புறுத்தலுக்கோ, அழுத்ததிற்கோ அல்லது அநீதிக்கோ ஆளாகாதிருத்தல் அத்தோடு, இனவாத, சாதி அடிப்படையில் மற்றும் மதவாதக் கருத்துக்களின் அடிப்படையில் பிரிக்கப்படாத சகவாழ்வு மற்றும் நல்லிணக்கத்துடன் இணைந்த இலங்கை தேசத்தவர் என்ற அடிப்படியில் இவரது அதிமுக்கிய செயற்பாடுகளாக நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்தல். ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லங்களை ஒன்றுக்கு மட்டுப்படுத்தல், தரமான கல்வி, பிள்ளைகளுக்கு உயர்வான பாதுகாப்பு போன்ற தரமான கோட்பாடு உள்ளடக்கியுள்ளதை அவதானிக்க முடியும்.

**கேள்வி: ஏனைய தேர்தல் விஞ்ஞாபனங்களை பற்றி?**

வர்த்தமானி என்பது, இலங்கை அரசினால் அரச வேலைகளுக்காக வேலைக்கு ஆட்களைச் சேர்த்தல், அமைச்சர்கள், செயலாளர்கள் போன்ற உயர் அரச பதவிகளுக்கு ஆட்கள் நியமனம் தொடர்பான அறிவிப்பினை வெளியிடுதல், ஏனைய அரச விளம்பரங்களை மற்றும் சில வங்கி விளம்பரங்களை வெளியிடல் ஆகியவற்றுக்கு பயன்படும் ஓர் அரசிதழாகும். அப்படிப்பட்ட வர்த்தமானியில் வெளியாகி, அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்து, தோட்டத் தொழிலாளர்களின் சாதாரண சம்பள விடையத்தையே செயற்படுத்த முடியவில்லை. அத்தோடு, பாராளுமன்றில் கொண்டுவரப்பட்ட சட்டங்களையே அமுல்படுத்த முடியாமல் திண்டாடுகிறார்கள். தேர்தல் விஞ்ஞாபனங்களில் உள்ளதையா நிறைவேற்றப் போகிறார்கள். ஆகவே, ஏனைய ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் என்பது, இந்த நாட்டு மக்களைப் பொறுத்தவரைக் கட்சிகளின் வர்ணங்களில் அலங்கரிக்கப்பட்ட வெறும் பொய் பிரசார விஞ்ஞாபனங்களே

**கேள்வி: கைகோர்த்து நின்றதற்காக விமர்சனம் வரவில்லையா ?**

சமூக ஊடகங்களில் முதிர்ச்சியற்ற பக்குவமில்லாத கருத்துக்களை வெளிப்படுத்திவருவது தேர்தல் காலங்களில் ஒரு புதுவித யுக்தியல்ல. இது ஒரு இயல்பான விடயம்தான். தமது கட்சிகளிலிருந்து மாற்றுக் கட்சிக்குச் சென்றவர்களை ஒரு சாரார் விமர்சிப்பார்கள். மாற்றுக் கட்சிக்குச் சென்றவர்கள், தாம் ஏன் சென்றோம் என்று விளக்கமளிப்பது வழமையான அரசியல் காலம் தான். தாம் பிரதிநிதித்துவம் செய்த கட்சியிலிருந்து சில காலம் விலகி மீண்டும் அதில் போய்ச் சேர்ந்து கொண்டவர்களும் இப்போது பேச ஆரம்பித்துள்ளனர். ஏன் விலகினோம் பிறகு எதற்காக இணைந்து கொண்டோம் என்பது பற்றியெல்லாம் கதைக்க அவர்களுக்கு அருகதையில்லை.

இவர்கள் அனைவரும் ஒரு விடயத்தைச் சிந்திக்க வேண்டும். மலையகத்தின் சகல கட்சிகளும் எப்போதும் ஒரே தேசிய கட்சியில் இருந்தவைகளில்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். தேவைகளுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் சுயநலத்திற்கும் அவர்களும் மாறிக்கொண்டு தான் இருக்கின்றனர். அது ஏனேனில், தமது கட்சித் தலைமைகளிடம் இந்த உறுப்பினர்கள் கேள்வி கேட்க முடியாது. தலைமைகள் செய்தால் அது தியாகமாகப் பார்க்கப்படுகின்றது. தொண்டர்கள் செய்தால் துரோகமாக நோக்கப்படுகின்றது இருந்தாலும் இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொள்பவர்களே ஏதாவதொரு கட்சியில் உறுப்பினராக நிலைத்திருந்து மக்களுக்குத் தொடர்ந்து சேவை செய்ய முடியும். யாருக்கும் எந்த கட்சியிலும் சேர்வதற்கோ, விலகுவதற்கோ உரிமைகளும் சுதந்திரங்களும் உண்டு. அது சரியா? பிழையா, என விமர்சிக்க ஆரம்பித்தால் கட்சித் தலைவர்களைதான் தொண்டர்கள் விமர்சிக்க வேண்டிவரும்.

**கேள்வி: தேசிய மக்கள் சக்தியின் பெயரை கூட யாருமே கூற மறுத்தனர் இதற்கு நீங்கள் கூறும் பதில் என்ன?**

ஆம். நீங்கள் கேட்கும் வினா பொதுவாக எல்லோரது மனதிலும் எழும் ஒரு சந்தேக வினாதான். பொதுவாக இலங்கை முழுவதும் குறிப்பாக எங்கள் மலையக மண்ணில் மக்கள் விடுதலை முன்னணி (JVP) தேசிய மக்கள் சக்தி (NPP) என்ற பெயரைக் கூறினாளே ஓர் அச்சம் நிலவுகின்றது. அதற்கான உண்மையான காரணம் உழைக்கும் வர்க்கத்தின் உண்மையான தொழிலாளர்களுக்காகவே உருவாக்கப்பட்ட ஒரு கட்சி/ இயக்கமே JVP ஆகும். இந்த கட்சியின் உண்மையான கொள்கையைக் கண்டு கொண்ட உழைக்கும் மக்கள் அனைவரும் அவர்களது முழு ஆதரவையும் மக்கள் விடுதலை முன்னணி கட்சிக்கு வழங்கினார்கள். அவர்களின் இந்த தீவிரமான வளர்ச்சியை நேரடியாக எதிர்க்க முடியாமலும் அவர்களின் வளர்ச்சியைத் தடுக்க வேண்டும் என்ற குறுகிய இலாபத்துக்காக ஒரு சில அரசியல் தலைவர்கள் இந்த கட்சிக்கு எதிராக உண்மைத் தன்மையற்ற பொய் வதந்திகளைத் தேர்தல் மேடைகளில் பிரசாரமாக அரங்கேற்றினார்கள். மேடைப் பேச்சுக்களையும் பொய் பிரசாரங்களையும் மட்டுமே கேட்டு நம்பிய எமது பாமர மக்கள் வேறு எந்த தகவல் தொழில்நுற்ப தொடர்புகளும் வசதிகளும் இல்லாமையால் இதன் உண்மைத் தன்மையை அறியாமலேயே வாழ்ந்து விட்டனர். பாவம் நம் மக்களுக்குப் பசுமையான வாழ்க்கையை அமைத்துத் தருவதாகப் பொய் வாக்குறுதிகளை வழங்கி, பொய்யான நம்பிக்கையை வளர்த்து, இதன் உண்மைத் தன்மையை அறிய விடவே இல்லை என்றே கூற வேண்டும். இவர்கள் கூறிய வார்த்தைகள் உண்மையா? பொய்யா? என்று கூட யோசிக்க முடியாதபடி அவர்களில் உண்மையற்ற வாக்குறுதிகள் இருந்தது, இதுவே எம் மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவாக இல்லாமல் இருக்கக் காரணமாக இருந்தது, இப்பொழுது அவ்வாறு இல்லை, எங்கள் சமூகம் நன்றாக யோசித்து முடிவெடுக்கக்கூடிய நிலையில் இருக்கின்றது, பழங்கால கதையின் பின்னணி என்ன என்பதை அறிந்து கொண்டுள்ளார்கள், இனி எங்களை உண்மையற்ற கதைகளைக் கூறி ஏமாற்ற முடியாது, சமீபத்தில் தலவாக்கலை நகரில் தேசிய மக்கள் சக்தியின் பிரசார கூட்டத்தில் எமது மலையக மக்களின் இன்றைய மாற்ற நிலையை அவதானிக்கலாம். ஒரு முறை வீழ்ந்து இருந்தோம் இப்போது எழுந்து விட்டோம் இனிமேல் யாராலும் எம் மலையக மக்களை வீழ்த்தவே முடியாது என்பதனை மிகவும் மகிழ்ச்சியோடு கூறுகின்றேன். இவர்களின் மாற்றத்தை ஜனாதிபதி தேர்தலின் முடிவின் பின் புரிந்துகொள்ள முடியும்.



# மாற்றம் இனி உங்கள் கையில்



கணேஷ்குமார் மதியந்தி,
ஊடககறகைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

கண்டி மாவட்டத்திற்கு உட்பட்ட தெல்தோட்டை, லூல்கந்துர போன்ற பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து வருவது முக்கிய பிரச்சினையாக உள்ளது. இப்பாடசாலைகள் அங்குள்ள மக்களாலேயே ஆராதிக்கப்படாத சூழ்நிலையே காணப்படுகிறது.

“நானும் இப் பாடசாலையிலேயே கல்வி கற்றேன். அப்போது, 300க்கும் அதிகமான மாணவர்கள் கல்வி பயின்று வந்தார்கள். ஆனால், தற்போது அது இரட்டை எண்ணிக்கைக்கு வீழ்ச்சி அடைந்துள்ளது என்பது உண்மை என்று அப்பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர் ஒருவர் தெரிவித்தார்.

கல்வி அமைச்சினால் 2021இல் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டின்படி, அரசாங்கத்தில் மொத்த பாடசாலைகளின் எண்ணிக்கை 10,155 ஆகவும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 249,494 ஆகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் கவனத்திற்குரிய விடயம் என்னவென்றால் கண்டி மாவட்டத்தினுடைய கல்வி வலையங்கள் தெஹிவல, கம்பளை, கண்டி, கட்டுகஸ்தோட்டை, தெல்தெனிய, வத்தேகம ஆகியவற்றில் மொத்தமாக 35 தேசிய பாடசாலைகள் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, இத்தரவின் படி சில பாடசாலைகளில் அதிகமான மாணவர்கள் கல்வி கற்கும் அதேவேளை சில பாடசாலைகளில் மிக குறைந்த அளவிலான மாணவர்களே கல்வி பயில்கின்ற சூழ்நிலையே காணப்படுகிறது.

> **“நகர்ப்புற பாடசாலைகளின் மீதான மாணவர்களின் கவர்ச்சி, பலதரப்பட்ட மாணவர்களுடன் இணைந்து கல்வி கற்கும் சூழல், கிராமிய பாடசாலைகள் மீதான நல்ல அபிப்ராயம் இன்மை, கிராமிய பாடசாலைகளை விடவும் நகர்ப்புற பாடசாலைகளில் போட்டி தன்மை அதிகமாகக் காணப்படுகின்றன**

நாராங்கின்ன, லூல்கந்துர, ஒப், கிரேட்வெளி, போப்பிட்டிய ரலிமான்கொட போன்ற சில இடங்களில் உள்ள பாடசாலைகளிலேயே குறைந்தளவிலான மாணவர்கள் காணப்படுகின்றனர். இப்பாடசாலைகளினை பொறுத்தவரையில், பெரும்பாலும் கூலி வேலை செய்யும் தொழிலாளர்களின் பிள்ளைகளே கல்வி கற்கின்றனர்.

மலையகமும் இதற்கு விதிவிலக்கல்ல. இது தொடர்பில் நகர்ப்புற பாடசாலைகளில் தமது பிள்ளைகளைச் சேர்த்துள்ள பெற்றோர் ஒருவர் குறிப்பிடுகையில், “நான் என்னுடைய பிள்ளைகளைக் கொண்டு போய் நகரப் பாடசாலையில் சேர்த்ததன் நோக்கம், கிராம பள்ளிக்கூடத்தில் எங்கட பிள்ளைகள் அதிகம் படிக்கிறது இல்ல அத்தோட இங்குப் படிப்பு சரியில்ல படிக்க சரியான வசதி வாய்ப்புகள் கூட இல்ல என்னோட பிள்ளைகளுடைய எதிர்காலம் நல்லா இருக்கணும்னா நகர பாடசாலைகளில் படிக்கிறது தான் நல்லது. அதனால்தான் அங்க படிக்க வைக்கிறேன்” என்றார்.

அதேவேளை, கிராமிய பாடசாலைகளில் கல்விப் பயிலும் மாணவர்களிடத்தில் அவர்களின் பாடசாலையில் காணப்படும் வளங்கள் தொடர்பிலும், கல்வி நடவடிக்கைகள் தொடர்பிலும், ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பாகவும் வினவியபோது, அவர்களின் பல பிள்ளைகளின் பெற்றோர் ஒருமித்த கருத்தையே தெரிவித்திருந்தனர்.

அவர்களில் டக்சலா என்ற மாணவி, “தனது தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்யக் கூடிய பௌதிக வளங்கள் காணப்படுவதுடன், ஆசிரியர்களும் சிறந்த முறையில் கற்பித செயற்பாடுகளை முன்னெடுப்பதோடு, இணைபாட விதான செயல்பாடுகளையும் மேற்கொள்கின்றனர்’ என்றார்.

தமது பிரதேசத்தில் உள்ள பெரும்பாலான மாணவர்கள் நகர்ப்புற பாடசாலைகளில் கல்வி கற்பதே தற்பெருமை உருவாக்கும் என்ற விம்பம் காரணமாக, நகர்ப்புற பாடசாலைகளிலேயே அதிகம் நாடிச் செல்கின்ற வாய்ப்பும் காணப்படுகின்றது என்றும் குறிப்பிட்டார். இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக 1- 5 வகையான வகுப்புகளை கொண்ட நாராங்கின்ன தமிழ் வித்தியாலயத்தில் ஒவ்வொரு வகுப்பிலும் பத்திற்குக் குறைவான மாணவர்களே கல்வி கற்கின்றனர். ஆனால், அக் கிராமத்தில் 200க்கும் அதிகமான பிள்ளைகள் கல்வி கற்கின்றனர் என்பதிலிருந்து அங்கு கிராம பாடசாலைகளின் நிலை கேள்விக்குறியாகவே உள்ளது.

> **“கிராமிய பாடசாலைகளில் ஒரு சில மாற்றங்களைச் செய்வதுடன், சமூகத்தின் மத்தியில் பாடசாலை தொடர்பான நல்ல அபிப்பிராயத்தையும் உருவாக்குவதன் மூலமும் கிராமிய பாடசாலைகளைச் சிறந்த பாடசாலைகளாக மாற்றியமைக்க வேண்டியது அனைவரிடமும் கடமையாகும்**

இதேபோன்று, தெல்தோட்டைக்கு அண்மையில் உள்ள சில கிராமிய பாடசாலைகளை ஆராய்ந்த போது, அப் பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள் வேறு சில காரணங்களை முன் வைத்தனர்.

“பெற்றோர்கள் தமது கௌரவம், அந்தஸ்து போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து, நகர்ப்புற பாடசாலைகளில் தமது பிள்ளைகள் படிப்பதினையே விரும்புகின்றார்கள். அங்கு பழைய மாணவர்களின் பங்களிப்பு அதிகமாக இருப்பது மற்றொரு பலம். நகர்ப்புற பாடசாலைகளின் மீதான மாணவர்களின் கவர்ச்சி, பலதரப்பட்ட மாணவர்களுடன் இணைந்து கல்வி கற்கும் சூழல், கிராமிய பாடசாலைகள் மீதான நல்ல அபிப்ராயம் இன்மை, கிராமிய பாடசாலைகளை விடவும் நகர்ப்புற பாடசாலைகளில் போட்டி தன்மை அதிகமாகக் காணப்படுகின்றன. நகர்ப்புற பாடசாலைகளின் கட்டுப்பாடுகள் மற்றும் நிர்வாக அமைப்பு போன்ற பல காரணங்களால் மாணவர்கள் நகர்ப்புற பாடசாலைகளை நோக்கிச் செல்வதாகக் கிராமிய பாடசாலை ஒன்றின் அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

நகர்ப்புற பாடசாலைகளே சிறந்தது என அனைவரும் செல்லுமிடத்து, கிராமப்புற பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் தொகை வீழ்ச்சி அடைந்து காலப்போக்கில் அந்த கிராமிய பாடசாலைகள் வலுவிழந்து செல்வதற்கான வாய்ப்புகள் அதிகம். இவ்விடத்தில் கிராமப்புற பாடசாலைகளையும் நகர்ப்புற பாடசாலைகளைப் போல், மாற்றுவதற்கு யாரும் முன் வருவது இல்லை என்கிறார் ஆசிரியர்.

நகர்ப்புற பாடசாலைகளில் கல்வி செயற்பாட்டினை தவிர இணைப்பாடவிதான செயல்பாடுகள் அதிகம் காணப்படுகின்றன. நகர்ப்புற பாடசாலைகளை நோக்கி தம் பிள்ளைகளை நகர்த்தும் பெற்றோர்கள் சில குறிப்பிட்ட சொல்லும் இன்னொரு காரணமாகும். ஹேவாயெட்ட பிரதேசத்தில் மிகவும் பிரபலமான பாடசாலை ஒன்றில் காணப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 172 ஆக காணப்படுகிறது.

தரம் 1 தொடக்கம் உயர்தரம் வரை வகுப்புகளை கொண்டமைந்த பாடசாலையாகவும் காணப்படுவதுடன், அப்பாடசாலையில் மாணவர்கள் செழுமையாகக் கல்வி கற்பதற்குரிய சூழல் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. இவ்வகையில், பல கிராமிய பாடசாலைகளில் மாணவர்களின் திறமைகளை வளர்ப்பதற்கான அனைத்து அம்சங்களும் அதற்கான முயற்சிகளும் காணப்படுகின்ற போதும், பெரும்பாலானோர் கிராமிய பாடசாலைகளைக் காட்டிலும் நகர்ப்புற பாடசாலைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, தமது கடமைகளின் சோர்வையும் ஆர்வமின்மையினையும் தருவதாகத் தன்னை இனம் காட்ட விரும்பாத கிராமிய பாடசாலை அதிபர் ஒருவர் கவலையுடன் குறிப்பிட்டார்.

பெற்றோர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் கருத்துப்படி, கிராமிய பாடசாலைகளின் வளர்ச்சி தொடர்பிலும், அவை தக்க வைக்கப்படுவதன் அவசியம் தொடர்பிலும், ஆழமாகக் கவனம் செலுத்தப்பட வேண்டும். இது தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுவதுடன், கிராமிய பாடசாலைகளில் ஒரு சில மாற்றங்களைச் செய்வதுடன், சமூகத்தின் மத்தியில் பாடசாலை தொடர்பான நல்ல அபிப்பிராயத்தையும் உருவாக்குவதன் மூலமும் கிராமிய பாடசாலைகளைச் சிறந்த பாடசாலைகளாக மாற்றியமைக்க வேண்டியது அனைவரிடமும் கடமையாகும். கல்வி கற்பதற்குப் பாடசாலை என்பது மிகவும் அவசியம். அப்படியான பாடசாலைகளை வளமிக்கதாக மாற்றுவது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.



மனிதம் உணர்த்தும் கதை

# 'Schindler's list'

ச.தனுஷ்கா,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.



ஹிட்லர் ஆட்சிக் காலத்தின் அவலங்களைப் பற்றி பல திரைப்படங்கள் கூறியுள்ளன. அவ்வகையில், 'Schindler's list' எனும் திரைப்படமானது ஹிட்லர் ஆக்கிரமிப்பில் இடம்பெற்ற கொடூரங்களை நம் கண்முன்னே கொண்டு வருகின்றது.இத்திரைப்படம் உண்மை சம்பவத்தை தழுவி தயாரிக்கப்பட்ட திரைப்படமாகும்.

1993ஆம் ஆண்டில் ஸ்டீபன் பேர்க்கின் இயக்கத்தில் லியம்நிசன் மற்றும் பலர் நடிப்பில் வெளிவந்த திரைப்படம் 'Schindler's list' இத்திரைப்படமானது 'ஷிண்ட்லர் ஆர்க்' என்னும் புனைவற்ற நாவலைத் தழுவி எடுக்கப்பட்டது.

12 விருதுகளுக்கு நொமினேட் செய்யப்பட்டு ஏழு ஆஸ்கார் விருதுகளை இத்திரைப்படம் வென்றுள்ளது.

22 மில்லியன் அமெரிக்க டொலர்களில் பட்ஜெட் செய்யப்பட்டு 322.2 மில்லியன் அமெரிக்க டொலர்களை வசூல் செய்துள்ளது.

இத்திரைப்படமானது, War film, Biographical film ஆகிய இரு வகைகளில் உள்ளடங்குகிறது. முரண்பாடாக மனிதர்களுக்கும் சமூகத்திற்கும் இடையிலான முரண்பாடு நிலவுகிறது. அதாவது, போர் சூழலும் யூத மக்கள் மீதான வெறுப்பும் பிரதான முரண்பாடாக காணப்படுகிறது.

திரைப்படத்தின் பிரதான கதாபாத்திரம் (Protagonist) ஆஸ்கார் ஷிண்ட்லர், Antoganist ஆக ஏமோன் கோத், Silent bit கதாபாத்திரமாக சிவப்பு நிற ஆடை அணிந்த சிறுமி (பெயரற்ற கதாபாத்திரமாகும்) இவ்வாறு திரைப்படத்தின் கதாபாத்திரங்கள் அமைந்துள்ளன.

1939ஆம் ஆண்டு ஹிட்லர் தலைமையிலான ஜேர்மானிய நாஜி படையினர் போலந்து நாட்டை கைப்பற்றியதின் விளைவால் உருவாகிய இரண்டாம் உலகப்போரின் தொடர்ச்சியாக 1941-1945ஆம் ஆண்டுகள் வரையிலும் கிட்டத்தட்ட 60 இலட்சம் யூத இன மக்கள் ஜேர்மானிய நாஜி இராணுவத்தால் இனப்படுகொலை செய்யப்பட்டனர்.இந்த இனப்படுகொலைகள் துப்பாக்கிச் சூட்டுக்களாலும், விஷ வாயு அடங்கிய அறைக்குள் மக்களை அடைத்தும், தொழிற்சாலைகளில் போதியளவு உணவு, நீர் இன்றி கடுமையான வேலைகளை வழங்கியும் மக்கள் கொலை செய்யப்பட்டனர். இப் பின்னணியை அடிப்படையாகக் கொண்டு இத்திரைப்படம் நகர்கிறது.

1939ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் இரண்டாம் உலகப்போரில் ஜேர்மானிய நாஜி இராணுவம் போலந்து நாட்டை கைப்பற்றுகிறது. அங்குள்ள மக்களை 'கிராக்கோ' என்னும் இடத்திற்கு அகற்றுகின்றனர். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பணம் சம்பாதிக்க வேண்டும் என நினைப்பவரே ஜேர்மனியைச் சேர்ந்த ஆஸ்கர் ஷிண்ட்லர். தன்னுடைய எனாமல் தொழிற்சாலைக்கு யூதர் ஒருவரை கணக்காளராக பணிக்கமர்த்துகிறார். யூத மக்களும் உயிர் பயத்தால் குறைந்த சம்பளத்திற்கு வேலை செய்தனர். இதனூடாக ஷிண்ட்லர் அதிகமாக பணம் சம்பாதித்தார். இதுநாள் வரையிலும் சுயநலமாக இருந்த திரைக்கதையின் கதாநாயகன், ஒரு சிறுமியின் மரணத்தைக் கண்டு மனமாற்றம் அடைகிறார்.

திரைப்படம் முழுவதும் கருப்பு- வெள்ளையில் நகரும். ஆனால், இச்சிறுமியின் காட்சிகளில் மட்டும் திரைப்படத்தில் வர்ணம் பிரயோகிக்கப் பட்டிருக்கும். இங்கு பார்வையாளர்களை இயக்குநர் உற்றுக் கவனிக்கத் தூண்டுகிறார். மனமாற்றம் அடைந்த ஷிண்ட்லர் யூதர்களை தன்னால் முயன்ற அளவில் காப்பாற்றும் முயற்சிகளில் ஈடுபடுகிறார். எவ்வாறு யூதர்கள் காப்பாற்றப்பட்டனர் என்பதே திரைப்படத்தின் மொத்த கதையோட்டமாக அமைகிறது.

அடிமைகளாக இருந்த மக்களில் 1,100 நபர்கள் ஒஸ்கார் ஷிண்ட்லரால் காப்பாற்றப்பட்டனர். இதனைக் குறிக்கும் வகையில் திரைப்படத்தின் பெயர்- 'Schindler's list' அமைந்துள்ளது. திரைப்படத்தில் ரொமான்டிக் காட்சிகள் (Romantic interest)அதிகமாக இடம்பெறவில்லை. மாறாக CODE-யூத மக்களின் வலி மிகுந்த அடிமை வாழ்வியலைத் திரைப்படம் முழுவதும் பேசுகிறது.

> **"திரைப்படத்தின் முடிவானது ஜேர்மனி - ரஷ்யாவின் கட்டுப்பாட்டின் கீழ் வருவதோடு, ஏமன் [Antagonist] தூக்கிலிடப்படுகிறான். யூத அகதிகள் விடுவிக்கப்படுவதுடன், ஜேர்மானிய நாஜிகள் தொடர்ச்சியாகக் கைது செய்யப்பட்டு வரும் வேளை, ஆஸ்கார் ஷிண்ட்லர் அவரது நன்னடத்தையின் மூலம் அப்பாவி யூதர்களைக் காப்பாற்றியதால் ரஷ்ய அரசினால் தண்டனையின்றி விலக்களிக்கப்படுகிறார். இறுதி காட்சியாக ஆஸ்கார் ஷிண்ட்லரின் கல்லறையில் யூத அகதிகளாக இருந்து தப்பியவர்களால் நினைவஞ்சலி செய்வதுடன், திரைப்படம் [Close ending] மூடிய முடிவாக நிறைவடைகிறது**

CODE-மனிதப் படுகொலைகளுக்கு மத்தியில் மனிதம் பேசும் கதையாகும்.

கெமரா கையாள்கையை நோக்கும்போது, அதிகமான காட்சிகள் Wide angle shot களில் அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாக, தொழிற்சாலை காட்சிகள், வில்லன் தினமும் காலையில் எழுந்தவுடன் மொட்டை மாடியிலிருந்து யூத அகதிகளைப் பொழுது போக்காக சுட்டுக் கொலை செய்யும் காட்சி போன்றனவாகும்.Two shot angle- கதாபாத்திரங்கள் உரையாடும் சந்தர்ப்பங்கள். Medium shot- யூத அகதிகளை தலையில் சுட்டுக் கொலை செய்தல் போன்ற காட்சிகளை உதாரணமாகக் கூறலாம்.

திரைப்படத்தில் இடம்பெற்றுள்ள சில காட்சிகள் பார்வையாளர்களின் நெஞ்சத்தை உறையச் செய்கிறது. நாஜி இராணுவத்தினர்களால் சீரழிக்கப்பட்ட யூத பெண்களின் துயரங்களை அப்பட்டமாக இத்திரைப்படம் பேசுகிறது. திரைப்படத்தின் வில்லனான ஏமன் தினமும் காலையில் எழுந்தவுடன் தனது மொட்டை மாடியிலிருந்து யூத அகதிகளைப் பொழுதுபோக்காக சுட்டுக் கொலை செய்யும் காட்சி, தொழிற்சாலைகளில் அடிமைகள் பணிபுரியும் காட்சிகள் போன்றன உள்ளத்தை தொட்டுச் சென்றன.

திரைப்படத்தின் Climax காட்சிகள் மிகவும் உணர்ச்சிப் பூர்வமானதாகும். போர்ச் சூழலை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி பணக்காரரான கதாநாயகன், அப்பாவி யூத மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டு மன மாற்றமடைந்து அம்மக்களில் தன்னால் இயன்றளவு மக்கள் தொகையினுக்காகப் பணம் கட்டி அவர்களில் 1,100 நபர்களின் பெயர்கள் உள்ளடக்கிய பட்டியலைத் தயாரித்து, ஜேர்மானிய அரசிடம் அடிமைகளாக இருந்த மக்களை விடுவித்து வேறு ஊருக்கு இடம்பெயர்ந்து மக்களுக்கு உயிர் வாழ்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்குபவனாகச் செயல்படுகிறார் ஷிண்ட்லர்.

காப்பாற்றப்பட்ட மக்களால் ஷிண்ட்லர்கு ஒரு மோதிரம் ஒன்று பரிசளிக்கப்படுகிறது. அம்மோதிரத்தில் CODE -Hibrew என பொறிக்கப்பட்டிருந்தது. அதன் பொருள் யாதெனில், "எவர் ஒருவர் ஓர் உயிரை காப்பாற்றுகிறாரோ, உலகம் முழுவதையும் அவர் காப்பாற்றியவர் ஆவார்" இவ்வார்த்தைகள் திரைப்படத்திற்கு வலு சேர்ப்பதாக அமைகிறது. திரைப்படத்தில் வருகின்ற இக்காட்சியைப் பார்க்கும் ஒவ்வொரு பார்வையாளர்களின் கண்களிலும் கண்ணீர் தளும்பும்.

திரைப்படத்தின் முடிவானது, ஜேர்மனி - ரஷ்யாவின் கட்டுப்பாட்டின் கீழ் வருவதோடு, ஏமன் (Antagonist) தூக்கிலிடப்படுகிறான். யூத அகதிகள் விடுவிக்கப்படுவதுடன், ஜேர்மானிய நாஜிகள் தொடர்ச்சியாகக் கைது செய்யப்பட்டு வரும்வேளை, ஆஸ்கார் ஷிண்ட்லர் அவரது நன்னடத்தையின் மூலம் அப்பாவி யூதர்களைக் காப்பாற்றியதால் ரஷ்ய அரசினால் தண்டனையின்றி விலக்களிக்கப்படுகிறார்.

இறுதி காட்சியாக ஆஸ்கார் ஷிண்ட்லரின் கல்லறையில் யூத அகதிகளாக இருந்து தப்பியவர்களால் நினைவஞ்சலி செய்வதுடன், திரைப்படம் (Close ending) மூடிய முடிவாக நிறைவடைகிறது. இரண்டாம் உலகப் போரின் போது ஜேர்மானிய நாஜி இராணுவத்தால் யூதர்கள் சொல்ல முடியாத துயரங்களையும் இன்னல்களையும் எதிர்கொண்டனர்.

அக்காட்சிகளை ஒரு ஆவணப்படத்தின் பாணியிலே இத்திரைப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது.







## "வருமுன் காப்போம்; ஆரம்ப நிலையில் கண்டறிவோம்"

"வருமுன் காப்போம், முழுமையாகக் குணப்படுத்த ஆரம்ப நிலையில் கண்டறிவோம்" எனும் தொனிப்பொருளில் shanu foundation நிறுவனத்தின் ஏற்பாட்டில் அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் புற்று நோயைக் கண்டறியும் நிலையம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு செவ்வாய்க்கிழமை (17) ஆரம்பிக்கப்பட்டது.

முன்கூட்டியே புற்று நோயைக் கண்டறியும் நிலையம் யாழ். போதனா வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

– எஸ்.ஆர்.லெம்பேட்









## ஆங்கில தினப் போட்டி

கல்முனைக் கல்வி மாவட்ட மட்ட ஆங்கில தினப் போட்டி சம்மாந்துறை அல்-மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் புதன்கிழமை (18) நடைபெற்றது.

கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, திருக்கோவில் ஆகிய நான்கு வலயங்களைச் சேர்ந்த மாணவர்கள் பங்கேற்ற நிகழ்வில், ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.நசீர் வரவேற்புரை நிகழ்த்த, வளவாளர் கே.குணரத்ன விளக்க உரை நிகழ்த்தினார். தொடர்ந்து எழுத்தாக்கம் மற்றும் நாடக போட்டிகள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

– வி.ரி. சகாதேவராஜா







## புத்தபெருமானின் சிலை கையளிப்பு

பினாரா போயா தினம் மற்றும் ஸ்ரீமத் அநகாரிக தர்மபால அவர்களின் 160ஆவது பிறந்த தின நினைவுநாளையொட்டி, செவ்வாய்க்கிழமை (17) நடைபெற்ற நிகழ்வொன்றில் கொழும்பிலுள்ள தர்மஜயதன விகாரைக்கு தர்மச்சக்கர முத்திரையுடனான புத்தர் சிலையொன்றை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா கையளித்திருந்ததுடன், இந்நிகழ்வில் இலங்கை பிரதமர் தினேஷ் குணவர்த்தன பிரசன்னமாகியிருந்தார்.







## புரட்டாதி பௌர்ணமி பூஜை

வரலாற்றில் முதல் தடவையாக நிந்தவூர் மாட்டுப்பளை மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்தில் புரட்டாதி பௌர்ணமி பூஜை செவ்வாய்க்கிழமை (17) அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

வொஷிங்டன்

# “பிரதமர் மோடி அற்புதமானவர்”

“பிரதமர் மோடி அற்புதமான மனிதர், அவரை சந்திக்க ஆவலாக இருக்கின்றேன்” என அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் வரும் நவம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தல் நடைபெற உள்ள நிலையில், தேர்தலுக்கான பிரசாரம் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. தேர்தலில் போட்டியிடும் கமலா ஹாரிசும், ட்ரம்பும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனிடையே கடந்த 17ஆம் திகதி மிச்சிகனில் பிரசாரத்தில் ஈடுபட்ட குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் டிரம்ப் பேசுகையில், “பிரதமர் மோடி அற்புதமானவர். அவரை அடுத்த வாரம் சந்திப்பேன்” என்று தெரிவித்தார். ஆனால் அவர்களின் சந்திப்பு பற்றிய கூடுதல் விபரங்களை கூறவில்லை.

பிரதமர் மோடியும் டொனால்ட் ட்ரம்பும்




கடைசியாக 2020ஆம் ஆண்டு பெப்ரவரியில் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதியாக டிரம்ப் இந்தியா வந்தபோது சந்தித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பெய்ரூட்




## பேஜர் வெடிப்பில் திடுக்கிடும் தகவல்கள்

லெபனான் நாட்டில் பேஜர்கள் வெடித்த சம்பவம் பற்றி பல்வேறு புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

லெபனான் நாட்டில் இருந்து கொண்டு, இஸ்ரேலுக்கு எதிராக செயல்படும் ஹிஸ்புல்லா ஆயுதக்குழுவினர், தங்கள் தகவல் தொடர்புக்காக கையடக்க கருவியாக பேஜர்களை பயன்படுத்தி வருகின்றனர்.

இந்தக் கருவிகள் அனைத்தும் கடந்த 17ஆம் திகதி இரவு ஒரே நேரத்தில் திடீரென வெடித்துச் சிதறின. இதில் 9 பேர் பலியாகினர். 2,700க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்நிலையில், பேஜர் வெடிப்பு தொடர்பாக பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதாவது, ஹிஸ்புல்லா அமைப்பினருக்கு வந்த பேஜர்களை முன்கூட்டியே வழிமறித்து, பார்சல்களை இஸ்ரேலிய உளவு அமைப்பு கைப்பற்றியுள்ள நிலையில், பேஜர்களின் உள்ளே வெடிபொருளை வைத்து, மெசேஜ் வந்தால் வெடிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சிம்பாப்வே

### “நமீபியாவைத் தொடர்ந்து சிம்பாப்வேயிலும்”

## உணவாக மாறிய யானைகள்

வரலாறு காணாத வறட்சியால் நமீபியாவைத் தொடர்ந்து சிம்பாப்வேயிலும் யானைகளைக் கொன்று மக்களுக்கு உணவாக வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பருவநிலை மாற்றத்தால் உலக நாடுகள் பலவும் திணறி வருகின்ற நிலையில், ‘எல் நினோ’ எனப்படும் காலநிலை மாற்றத்தால், தெற்கு ஆபிரிக்க நாடுகள் பேரழிவை சந்தித்து வருகின்றன.

இந்நிலையில், கடுமையான உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால், நமீபியாவில் 83 யானைகள் உட்பட 160 வனவிலங்குகளை கொன்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவளிக்கப் போவதாக அறிவிக்கப்பட்ட நிலையில், நமீபியா எடுத்த முடிவை சிம்பாப்வேயும் பின்பற்ற முடிவு செய்துள்ளது.

அங்கு நாற்பது ஆண்டுகளில் இல்லாத வகையில் கடும் வறட்சி வாட்டி வதைத்து வருகிறது. கடந்த ஆண்டு மட்டும் 50 யானைகள் கொல்லப்பட்ட நிலையில், தற்போது 200 காட்டு யானைகளைக் கொன்று இறைச்சியை மக்களுக்கு விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

குறிப்பாக, கடும் வறட்சியான சூழலில் உணவுக்காக மனித-விலங்கு மோதல்கள் ஏற்படும் வாய்ப்பு உள்ளதால், பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வனவிலங்குகளை கொன்று உணவளிக்க அரசே களத்தில் இறங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஹைதராபாத்

### தினமும் 200 தோப்புக்கரணம்

## மயங்கிய மாணவிகள்

ஆந்திராவில் 200 முறை தோப்புக்கரணம் போடுமாறு மாணவிகளை பாடசாலை அதிபர் பாடாய்படுத்திய நிலையில், அவர்களில் 50 பேர் மயங்கி, சரிந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஆந்திர மாநிலம் அல்லுரி சீதாராம ராஜு மாவட்டத்தில் உள்ள அரசு பாடசாலை ஒன்றில் மாணவிகள் ஒழுங்காக படிப்பதில்லை, உத்தரவுக்கு கீழ்படிய மறுக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இதையடுத்து, பாடசாலையின் அதிபர் மாணவிகளை அழைத்து அவர்களுக்கு தண்டனை வழங்கியுள்ளார். அனைவரும் 3 நாட்கள் தொடர்ந்து 200 முறை தோப்புக்கரணம் போட வேண்டும் என்பதே அது.

இந்நிலையில், தோப்புக்கரணம் போட, போட மாணவிகள் ஒவ்வொருவரின் உடல்நிலையும் மோசமடைந்துள்ளது.

சிலர் கால்கள் வீங்கியபடி கதற அப்போதும்



தண்டனை நிறுத்தப்படவில்லை என்று தெரிகிறது.

தொடர்ந்து மாணவிகள் தோப்புக்கரணம் போட்டதால் கிட்டத்தட்ட 50 மாணவிகள் அங்கேயே மயங்கி, சரிந்து விழுந்திருக்கின்றனர்.

இதைக்கண்டு அதிர்ந்த மற்ற ஆசிரியர்கள் மாணவிகளின் பெற்றோர்களுக்கு தகவல் தெரிவித்துவிட்டு உள்ளூரில் உள்ள மருத்துவமனையில் கொண்டு போய் சேர்த்தனர்.

இந்நிலையில், இந்த சம்பவம் பூதாகரமாகிய நிலையில், இதுகுறித்து பெற்றோர் சார்பில் பொலிஸில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சென்னை

## “ராகுலின் பாதுகாப்பை அதிகரிக்க வேண்டும்”



ராகுல் காந்தியின் நாக்கை அறுத்தால், ரூ.11 இலட்சம் சன்மானம் என்று சிவசேனா சட்டமன்ற உறுப்பினர் கூறியதையடுத்து, ராகுல் காந்தியின் பாதுகாப்பை அதிகரிக்க வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

மகாராஷ்டிராவில் சிவசேனா (ஷிண்டே) சட்டமன்ற உறுப்பினர் சஞ்சய் கெய்க்வாட், மக்களவை எதிர்கட்சித் தலைவர் ராகுல் காந்தியின் நாக்கை அறுப்பவருக்கு ரூ.11 இலட்சம் சன்மானம் கொடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இட ஒதுக்கீடு தொடர்பாக ராகுல் காந்தி அமெரிக்காவில் பேசிய பேச்சுக்கு அவரது நாக்கை அறுக்க வேண்டும் என்று சிவசேனா எம்எல்ஏ சஞ்சய் கெய்க்வாட் தெரிவித்திருந்தார்.

அவரின் கருத்துக்கு காங்கிரஸ் கடும் கண்டனம் தெரிவித்தது. காங்கிரஸ் பிரமுகர் கொடுத்த புகாரின் அடிப்படையில் சஞ்சய் கெய்க்வாட்டிற்கு எதிராக பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

சென்னை

## துணை முதல்வராகும் உதயநிதி?



தமிழக துணை முதல்வராக தற்போதைய முதல்வரான ஸ்டாலினின் மகனும் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் பேரனுமான உதயநிதி தெரிவு செய்யப்படவுள்ளதாக தமிழக அரசியல் வட்டாரத்தில் பரவலாக பேசப்படுகிறது.

தனது குடும்ப மற்றும் அரசியல் வாரிசான உதயநிதியை முதல்வர் பதவிக்கு தயார்படுத்தி வருகிறார் ஸ்டாலின். இதன் முன்னோட்டமாக உதயநிதி முதலில் துணை முதல்வராக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தனது எண்ணம் பற்றி மு.க.ஸ்டாலின், மூத்த கட்சி நிர்வாகிளுடன் புதன்கிழமை (18) ஆலோசித்ததாகவும், ஸ்டாலினின். இக்கருத்துக்கு கட்சியில் யாரும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்றும் கூறப்படுகின்றது.

ஏற்கெனவே உதயநிதிக்கு கட்சியிலும் ஆட்சியிலும் முக்கியத்துவம் இருந்தாலும், அரசு பதவியில் இருந்தால் முதல்வருக்குரிய பயிற்சியும் கிடைக்கும் என நம்பப்படுகின்றது.

### நியூசிலாந்துக்கெதிரான முதலாவது டெஸ்டின்

# முதலாம் நாளில் முன்னிலையில் இலங்கை

நியூசிலாந்துக்கெதிரான முதலாவது டெஸ்டின் முதலாம் நாளில் இலங்கை முன்னிலையில் காணப்படுகின்றது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், காலியில் புதன்கிழமை (18) ஆரம்பமான இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கையணியின் தலைவர் தனஞ்சய டி சில்வா தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை, ஆரம்பத்திலேயே திமுத் கருணாரத்னவை வில்லியம் ஓ ரூர்க்கிடம் இழந்தது.

பின்னர் சிறிது நேரத்தில் பதும் நிஸங்கவையும் ஓரூர்க்கிடம் 27 ஓட்டங்களுடன் பறிகொடுத்தது.

இதையடுத்து, ஜோடி சேர்ந்த தினேஷ் சந்திமால், அஞ்சலோ மத்தியூஸ் இனிங்ஸை நகர்த்திய நிலையில், 30 ஓட்டங்களுடன் நியூசிலாந்து அணித்தலைவர் டிம் சௌதியிடம் வீழ்ந்தார்.

தொடர்ந்து ஒரு பக்கத்தில் கமிந்து மெண்டிஸ் நிலைத்து நிற்க, டி சில்வா கிளென் பிலிப்ஸிடம் வீழ்ந்ததோடு, 36 ஓட்டங்களுடன் ஓ ரூர்க்கிடம் மத்தியூஸ் வீழ்ந்தார்.

பின்னர் குசல் மெண்டிஸுடன் கமிந்து மெண்டிஸ் இணைந்து இனிங்ஸைக் கட்டியெழுப்பிய நிலையில், 50 ஓட்டங்களுடன் பிலிப்ஸிடம் குசல் வீழ்ந்தார்.

இறுதியில் 114 ஓட்டங்களுடன் அஜாஸ் பட்டேலிடம் கமிந்து வீழ்ந்த நிலையில், நேற்றைய முதல் நாள் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 302 ஓட்டங்களை தமது முதலாவது இனிங்ஸில் இலங்கை பெற்றுள்ளது. ரமேஷ் மெண்டிஸ் 14 ஓட்டங்களுடனும், பிரபாத் ஜெயசூரிய ஓட்டமெதுவும் பெறாமலும் களத்திலுள்ளனர்.



### அமரர் இ.சிறிகரன் நினைவுக் கிண்ணத் தொடர்:

## சம்பியனான அராலி பிளாஸ்ரர்

■ எஸ்.தில்லைநாதன்

அராலி விளையாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெற்ற அராலி பிறீமியர் லீக் தொடராக நடைபெற்ற சிறிகரனின் நண்பர்களின் நிதிப்பங்களிப்பில் பேரவையின் விளையாட்டு வித்தகன் அமரர் இ. சிறிகரன் நினைவுக் கிண்ணத் தொடரில் அராலி பிளாஸ்ரர் அணி சம்பியனானது.

ஞாயிற்றுக்கிழமை (15) நடைபெற்ற இறுதிப் போட்டியில் அராலி பன்ராஸ் அணியை வென்றே பிளாஸ்ரர் சிறிகரன் நினைவுக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.



### மத்திய மாகாண பாடசாலைகளுக்கிடையிலான ஷீல்ட் றக்பி சம்பியன்ஷிப்:

## சம்பியனானது மடவள மதீனா தேசிய கல்லூரி

■ அஸ்ஹர் இப்றாஹீம்

மத்திய மாகாண றக்பி நடுவர் சங்கமும், மத்திய மாகாண றக்பி சம்மேளனமும் இணைந்து மத்திய மாகாண பாடசாலைகளுக்கிடையே நடத்திய றக்பி தொடரில் மடவள மதீனா தேசிய கல்லூரி சம்பியனானது.

பல்லேகல திருத்துவ கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற தொடரின் இறுதிப் போட்டியில் தலாது ஓயா தேசிய கல்லூரியை 31-7 என்ற புள்ளிகள் கணக்கில் மடவள மதீனா தேசிய கல்லூரி வென்று ஷீல்ட் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.




### கிழக்கு மெய்வல்லுநர் போட்டி:

## முதலிடம் பெற்ற விகாஸ்

■ அஸ்ஹர் இப்றாஹீம்

கிழக்கு மாகாண பாடசாலைகளுகிடையிலான மெய்வல்லுநர் போட்டியானது மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றபோது 18 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான தட்டெறிதலில் திருக்கோவில் மெதடிஸ்த மிஷன் தமிழ் மகா வித்தியாலய மாணவன் வி.விகாஸ் முதலிடத்தைப் பெற்று தேசிய மட்ட போட்டிக்குத் தெரிவாகியுள்ளார்.




### சம்பியன்ஸ் லீக்:

## மிலனை வீழ்த்திய லிவர்பூல்

ஐரோப்பிய காற்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரில், இத்தாலிய சீரி ஏ கழகமான ஏ.சி மிலனின் மைதானத்தில் புதன்கிழமை (18) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 3-1 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான லிவர்பூல் வென்றது.

லிவர்பூல் சார்பாக இப்ராஹிம் கொனட்டே, வேர்ஜில் வான் டிஜிக், டிமினிக் ஸபொஸ்லாய் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். மிலன் சார்பாகப் பெறப்பட்ட கோலை கிறிஸ்டியன் புலிசிச் பெற்றிருந்தார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 12, செப்டெம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.